# இறையியல் கோலங்கள்

வடிவம் : 5

வண்ணம் : 3



மார்ச் 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் குழு:

**ஆசிரியர் :**

அருள்திரு. சீ. யோ. இம்மானுவேல்

**துணை ஆசிரியர்கள் :**

அருள்திரு. இம்மானுவேல் பெர்ணாண்டோ

அருள்திரு. ஜே. நீக்கிலஸ்

அருள்திரு. ஜெறாட் சவரிமுத்து

Joint Publication of :

**St. Francis Xavier's Seminary**
Columbuthurai, Jaffna
Sri Lanka

**Gnanapragasar Tamil Acadmey**
National Saminary of Sri Lanka
Ampitiya, Kandy
Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# IRAI - IYAL KOLANGAL

**Tamil Theological Quarterly**


| வடிவம்: 5 | மார்ச் 1989 | வண்ணம்: 3 |
| --- | --- | --- |


## வெளியிடுவோர்


**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி**
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

**ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகம்**
தேசிய குருத்துவக் கல்லூரி
அம்பிட்டியா, கண்டி.
இலங்கை


(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


பக்கம்

**முன்னுரை**
அருள்திரு. S. J. இம்மானுவேல் 1

1. **கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் துன்பம்**
அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை 2

2. **அடிமைத்தனமும் விடுதலையும்**
அருள் சகோதரர் ப. டெஸ்மன் குலாஸ் 10

3. **பாஸ்கா ஒரு பயணம்**
அருள்தந்தை A. பிலிப் 17

4. **கிறிஸ்துவின் உயிர்ப்பும் கிறிஸ்தவ சாட்சியமும்**
அருள் சகோதரன் T. A. தவராஜசிங்கம் 24

5. **உயிர்த்த கிறிஸ்துவின் கொடை - சமாதானம்**
திரு. கி. சா. பங்கிராஸ் 30

6. **நாளாந்த வாழ்வில் உயிர்ப்பின் அனுபவம்**
அருள் சகோதரி M. பொனவெஞ்சர் 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## உய்விக்கும் உயிர்ப்பு

பாஸ்கா நிகழ்ச்சிக்கு இரு பக்கங்கள் உண்டு. பாவமும் அதன் விளைவான துன்பமும் மரணமும் ஒருபக்கம்; தெய்வீக அருளும் அதன் கொடையான சமாதானமும் புது வாழ்வும் மறுபக்கம்.

மரணத்துடன் மண்ணுலக வாழ்வுடன் எல்லாம் தோல்வியான முடிவுதான் என்று எங்கும் தருவாயில் விண்ணுலகைச் சார்ந்த ஒரு புது வாழ்வு ஆரம்பமாகிறது. ஆகையால் பாஸ்கா மண்ணுலக முடிவிலும் விண்ணுலக ஆரம்பத்திலும் நிகழும் எல்லை நிகழ்ச்சியாக இருக்கின்றது. மண்ணில் உதித்த யேசு பாடுகளினூடாக துன்பத்தையும் மரணத்தையும் வென்று உயிர்த்த கிறிஸ்துவாக புதிய வாழ்வையும் சமாதானத்தையும் வழங்குகின்றார்.

ஆகையினால் எமது பாஸ்கா பாவத்தினின்றும், மரணத்தினின்றும் உயிர்ப்பு வாழ்விற்கும் உண்மைச் சமாதானத்திற்கும் செல்லும் பயணமாக அமைகின்றது. இப்பயணத்தில் இறைவனே நமது மாதிரியும் துணையும்.

இவ்வுண்மைகளை பலகோலம் போட்டு பலவேறு கோணங்களிலிருந்து வரைய முயற்சிப்பினும், இறைவனில் பாஸ்கா ஓரே நிகழ்கால நிகழ்ச்சியாக எம்மில் நடந்து கொண்டிருக்கின்றது. இவ்வுணர்வின் உயர்வுதான் எமக்குப் புதுவாழ்வும் சமாதானமும் கொடுக்கவல்லது.

உயிர்த்தவர் உம்மை உய்விக்கட்டும்.

எஸ். ஜே. இம்மானுவல்

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
17-2-1939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் துன்பம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

**முன்னுரை**

**வி**னுக்கள் எல்லாம் விடைகளைத் தேடி நிற்கின்றன. விடை காணாத வினுக்களும் உண்டு. விடைகாணாத வினுக்கள் எல்லாம் விடை இல்லாத வினுக்கள் அல்ல.

ஏன் இந்தத் துன்பம்? என்ற கேள்விக்கு பலரும் பல துன்ப அனுபவங்களின் மத்தியில் பல கோணங்களில் விடைதேடினர். பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களும், ஞானிகளும், சங்கீத ஆசிரியரும் துன்பத்திற்குரிய சரியான பதிலைத் தேடிக் கண்டுபிடிக்கவில்லை

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளும் இன்றைய உலகில் திருச்சபை (இ. உ. தி. 10) என்னும் கொள்கைத்திரட்டில் ''மனிதன் என்றால் என்ன? இம் மனித முன்னேற்றத்திற்குப் பின்னும் நிலைத்திருக்கும். துன்பம், தீமை, சாவு இவற்றின் பொருள் யாது?'' என வினவுகிறது.

எவ்வளவு அனுபவப்பட்டவர்கள் என்றாலும் எவ்வளவு மன வலிமை உள்ளவர்களென்றாலும் துன்பவேளையில் கடவுள் ஏன் துன்பங்களை அனுமதிக்கிறார் என்று முறையிடுகிறார்கள்.

மாசற்றவர்கள் பலர் துன்பம் அனுபவிக்கிறார்களே? இதன் பொருள் என்ன?

— பிறக்கும்போது குறைவுகளோடு பிறக்கிறார்கள் ...

— நல்லது செய்தவர்கள் துன்பம் அனுபவிக்கிறார்கள் ...

— ஒரு துன்ப முடிவில் இன்னுமோர் துன்பம் ...

இப்படியே ஒரு சங்கிலிக் கோர்வையாக துன்பம் வருகிறது. இவற்றையெல்லாம் எப்படிப்புரிவது?

தமிழ் மக்கள் நாம் எல்லோரும் பல துன்ப அனுபவத்தில் வாழ்கிறோம். இந்தா முடிகிறது என்று பார்க்கும்போது முடிவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இடி விழுகிறது. இப்படியே துன்பத்தின்மேல் துன்பம் முடிவில்லாத துன்பம். இவற்றின் முடிவு என்ன? எதற்காக எம்மீது இத்துன்பம்? நியாயமான கேள்விகள்,

எமது சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக நாம் வெறும் மண்டை ஓடுகளையும் எலும்புக் கூடுகளையும்தான் சம்பாதித்துள்ளோம். என்று வெறுப்போடு கூறுவது நமது துன்ப மிகுதியின் வெளிப்பாட்டைக் காட்டுகிறது.

"இத்துன்பத்தை அனுபவிக்க நான் என்ன செய்தேன்" – யோபு கேட்ட அதே கேள்விதான் எமது கேள்வியாகவும் இருக்கிறது. மனிதனின் பாவத்தின் வழியாகத்தான் துன்பமும் சாவும் வந்தது என்று மறைக்கல்வி போதிக்கிறது. துன்பமும் துயரங்களும் மனிதனைப் பதன்படுத்த இறைவன் உபயோகிக்கும் கருவிகள் என்று கூறப்படுகிறது.

விசுவாசமில்லாதவன் துன்பம் தவிர்க்கப்படவேண்டிய தீமை என்கிறான். துன்பம் பொருள் அற்றது என்று கிரேக்கர் எண்ணினார்கள், யூதர்கள் சிலுவையை ( துன்பம் ) ஒரு முட்டுக்கட்டை என நினைத்தார்கள்,

இயேசு துன்பத்திற்காக துன்பத்தை ஏற்கவில்லை, என்பது வேதாகமத்திலும் பாரம்பரியத்திலும் தெளிவாகிறது. இறையியல் வல்லுனர்களும் இதை ஒரே மனதாக ஏற்றுள்ளனர். புனித தோமஸ் அக்குவைனஸ் இதை வெகு அழகாக விளக்குகிறார். பரமதந்தை பாடுகளை அனுமதித்தார். சுதன் ஏற்றுக்கொண்டார். தூய ஆவி இறைமகிமையை ஏற்பாடு செய்தார்.

### துன்பம் என்றால் என்ன ?

கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் துன்பம் என்ற கருத்தின் அடிப்படை போது, துன்பம் என்றால் என்னவென்று ஒருவரைவிலக்கணம் கொடுப்பது தேவையற்றது. எமது அனுபவத்தினாலே துன்பம் என்றால் என்னவென்று எமக்குத் தெரியும். துன்பத்திற்கு என்ன விளக்கம் என்று சிந்திப்பதைவிட துன்பத்திற்கு என்ன செய்யவேண்டுமென்று சிந்திப்பது முக்கியம்.

நடைமுறை வாழ்வில் துன்பத்தை எப்படி நீக்குவது என்று சிந்திப்பதிலேயே மனம் செல்கிறது. எப்படி இருப்பினும் துன்பத்தை இன்னும் புரிந்துகொள்ள கிறிஸ்தவ கண்ணோட்டம் உதவ வேண்டும். அதில் நின்று தப்பி ஓடவல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமானது. இயல்பான துன்பமென்றும் இயல்பிற்கு மாறான துன்பமென்றும் இறைப்பற்றுடைய துன்பமென்றும் பிரிக்கப்படலாம்.

இயல்பான துன்பம் மனிதவாழ்க்கையில் இயல்பாகவே ஏற்படுவது. உலக வாழ்வின் இயற்கை நிகழ்வுகளால் ஏற்படுவது. விசுவாசத்தின் தந்தை ஆபிரகாம் தன் மனைவி இறந்தபோது அழுதார். தனக்கு விரோதமாய் குழப்பம் செய்த மகன் இறந்ததைக் கேள்விப்பட்ட தாவீது அழுதார். லாசரின் கல்லறை முன் யேசு அழுதார்.

"ஒவ்வொன்றிற்கும் ஒரு காலம் உண்டு." ... பிறக்க ஒரு காலம் ... இறக்க ஒரு காலம் ... கண்ணீர்விட ஒரு காலம் ... சிரிக்க ஒரு காலம்... (சீராக் 3 : 1 — 4). இயல்பான துன்பம் அனுபவிக்கும்போது அழுகிறோம். அழுகைக்கு குணமாக்கும் ஆற்றல் உண்டு.

இயல்பிற்கு மாறான துன்பம், நம்மில் ஏற்படவேண்டிய பலருக்கு மாறான விளைவை ஏற்படுத்துகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். சுயநலம், பயம், குற்றப்பழி உணர்வு போன்றவை இதற்குக் காரணமாகலாம்.

முதல்வகைத் துன்பத்திற்கும் இரண்டாம் வகைக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், முதல்வகை இயல்பான துன்பம், காயங்களை ஆற்றுகிறது. உண்மைநிலையை ஏற்று சூழ்நிலைக்கு ஏற்ப மாறி மாறி வாழ வழிவகுக்கிறது. இறைவனின் ஆறுதலைப் பெறுகிறது. ஆக்க நெறியில் செல்லத் தூண்டுகின்றது. ஆனால் இரண்டாம்வகைத் துன்பம் காயங்களைப் பெரிதாக்குகிறது. சூழ்நிலைக்கு ஏற்ப மாறிவாழத் தடைவிதிக்கிறது. இறைவனைச் சபிக்கத் தூண்டுகிறது. இறைவனின் துணையைப் பெறும் மன அமைதியை இழக்கிறது. இறைபற்றுடைய துன்பம் எளியமனத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களதே எனும் கூற்றின் அடிப்படையில் ஏற்படுவது.

துன்பங்களை இந்த மூன்று நிலைகள் மூலமாகத்தான் நாம் அதிகமாகப் பெற்றுக்கொள்ளுகிறோம் என்ற பொதுவான அடிப்படையை முன்வைத்துக்கொண்டு எம் வாழ்க்கையில் நாம் துன்பம் பற்றி எம் மனதிலும், வெளியிலும் எழுப்புகின்ற சில கேள்விகளுக்கு கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் விடைகாண முற்படுவோம்.

துன்பம் : பழைய ஏற்பாட்டில் யோபு

துன்பமென்ற கேள்விக்கு விடைகாண முயன்றவர்களில் பழைய ஏற்பாட்டில் யோபுவையும் புதிய ஏற்பாட்டில் புனித சின்னப்பரையும் நாம் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோபு கடவுளோடு உரையாடுகிறார். துன்பத்திற்கு விடைகாண முற்படுகிறார். சின்னப்பர் கிறிஸ்துவோடு உரையாடுகிறார். துன்பத்திற்கு விடைகாண முற்படுகிறார். யோபு ஆகமத்திலோ, யோபுவின் தனி வாழ்விலோ துன்பத்திற்கு நிறைவான விடை காணப்படவில்லை.

சின்னப்பர் கிறிஸ்துவோடு நின்று கிறிஸ்துவில் நிறைவான விடை காணுகிறார். யோபு நீதிமானாக வாழ்கிறார். எல்லாச் செல்வங்களும் நிறைந்துள்ளன. யோபு சோதிக்கப்படுகிறார். எல்லாச் செல்வங்களும் பறி போகின்றன. கடவுள் நம்பிக்கையில் இருக்கிறார். நண்பர்கள் அவரைச் சோதிக்கிறார்கள்.

"துன்பத்திற்குக் காரணம் பாவம். நீ இப்பொழுது துன்புறுகிறாய். ஆகவே நீ பாவம் செய்திருக்கவேண்டும்" — இது நண்பர்கள் வாதம். "நான் பாவம் செய்யவில்லை என்பதற்கு என் மனமே சாட்சி. ஆகவே என்துன்பத்திற்குக் காரணம் பாவமாயிருக்க முடியாது" — இது யோபுவின் எதிர்வாதம்.

ஈற்றில் ஆண்டவரில் வைத்த விசுவாசம் தளராமல் (யோபு 19 : 25-27) யோபு உச்ச நிலையை அடைகிறார். ஆண்டவர் ஞானத்தின் செயல்களைச் செய்துகாட்டி மக்களையும் செல்வத்தையும் கொடுக்கிறார். துன்பம் அனுபவ ரீதியில் இங்கு அலசப்பட்டாலும் பிரச்சனைக்கு நிறைவான பதில் காணப்படவில்லை.

துன்பம் : புதிய ஏற்பாட்டில் புனித சின்னப்பர்

புனித சின்னப்பர் கிறிஸ்துவிற்காகப் பல துன்பங்களை அனுபவித்தவர். கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் துன்பம் என்னும் பகுதி அவரது அனுபவத் துன்பங்களை ஆராயாமல் நிறைவுறாது.

புனித சின்னப்பர் கிறிஸ்துவின் அழைப்பைப் பெறும் போது ஆண்டவர் அவர் எவ்வளவு துன்புற வேண்டுமென்பதை அனனியாசிடம் கூறினார். (அப். பணி. 9 : 16) "ஆண்டவர் அதற்கு ... என் பெயரின் பொருட்டு அவர் எவ்வளவு பாடுபடவேண்டுமென்பதை நான் அவருக்குக் காண்பிப்பேன் என்றார்". அதன் பின் புனித சின்னப்பர் பல துன்பங்களைப் பெற்றார். சிலவற்றை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டார், சிலவற்றில் திணறினார் சிலவற்றை எடுத்துவிடும்படி ஆண்டவரிடம் வேண்டினார்.

தனது ஆழ்ந்த துன்ப அனுபவத்தில் புனித சின்னப்பர் தனது திருமுகங்களில் பின்வருமாறு கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் செய்வது என்னவென்று எனக்கே தெரியவில்லை. எதைச் செய்ய விரும்புகிறேனோ அதை நான் செய்வதில்லை. எதை வெறுக்கிறேனோ அதையே செய்கிறேன்'' (உரோ 7 : 15).

''நான் படும் துன்பங்களில் இப்பொழுது மகிழ்ச்சி கொள்கிறேன் ...... கிறிஸ்துபடவேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாய் இருப்பதை என் உடலில் நிறைவாக்குகிறேன்'' (கொலோ 1 : 24)

''வேதனையோ நெருக்கடியோ கலாபனையோ பசியோ ஆடையின் மையோ இடர்களோ வாளோ எது நம்மைப் பிரிக்க முடியும்''

(உரோ 9 : 35)

''எல்லாவகையிலும் வேதனை உறுகிறோம். ஆனால் ஒடுங்கிப்போவ தில்லை. மனக்கலக்கம் அடைகிறோம், ஆனால் ஒடுங்கிப்போவதில்லை. மனக்கலக்கம் அடைகிறோம் ஆனால் மனம் உடைவதில்லை, துன்புறுத் தப்படுகிறோம் ஆயினும் இறைவனால் கைவிடப்படுவதில்லை ... போகும் இடமெல்லாம் யேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கிறோம்...... யேசுவிற்காக எந்நேரமும் சாவிற்கு கையளிக்கப்படுகிறோம்

(2 கொரி 4 : 8)

... ... பலமுறை மரண வாயிலில் நின்றேன். ஐந்துமுறை யூதரிடமிருந்து ஒன்று குறைய நாற்பது கசையடி வாங்கினேன். மும்முறை தடியால் அடிபட்டேன். ஒருமுறை என்னைக் கல்லால் எறிந்தார்கள். மும்முறை கப்பற்சிதைவில் சிக்குண்டேன். ஒரு இரவும் பகலும் நடுக்கடலில் அல்லலுற்றேன் ... ... (2 கொரி 11 : 24).

எவ்வளவு வேதனைப்பட்டாலும் ஒடுக்கப்பட்டாலும் இறைவனால் கைவிடப்படமாட்டோம் என்று கூறிய சின்னப்பர் யேசுவின் அப்போஸ் தலர்களைவிட தான் அதிகமாக உழைத்ததாகவும் தன் எல்லாத் துன் பங்களையும் கோர்வையாக மேற்கண்டவாறு கூறுகிறார். கிறிஸ்துவைச் சந்தித்து மனம்மாறிப் பல துன்பங்களை அனுபவித்து அவற்றிற்காகப் பெருமைப்பட்ட அவர் ஒரு கட்டத்தில் துன்பத்தை எடுத்துவிடும்படி வேண்டினார் என்பதும் நாம் கவனிக்கவேண்டியதொன்று.

''ஆதலால் என்னிடமிருந்து அதை அகற்றுமாறு மும்முறை ஆண்டவரை வேண்டினேன். அவரோ நான் தரும் அருள் உனக்குப் போதும். ஏனெனில் மனித வலுவின்மையில் தான் என் வல்லமை சிறந்தோங்கும் என்று சொல்லிவிட்டார்'' (2 கொரி 12 : 8).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு புனித சின்னப்பரின் வாழ்வில் துன்பம் அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கிற போது முடிவாக ஒன்றைச் சொல்லலாம். புனித சின்னப்பர் யேசுவிற்காக மனம்மாறியபின் பல துன்பங்களை அனுபவித்தார். இயேசுவோடு இணைந்திருந்தமையால் இயேசுவின் பாடுகளில் தன் துன்பங்களுக்கு விடைகாண முற்பட்டமையால் துன்பங்கள் பெரிய சுமையாக இருக்கவில்லை.

புனித சின்னப்பரே இதைச் சொல்லி இருக்கிறார்.

கிறிஸ்துவோடு உடன் உரிமையாளர்கள். ஆனால் அவருடைய பாடுகளில் நாம் பங்கு பெறவேண்டும். அப்போதுதான் அவரோடு மகிமையிலும் பங்குபெறுவோம் (உரோம 8 : 17).

இயேசுவோடு நாம்

துன்பங்களை நாம் கடவுளால் கைவிடப்பட்டோம் என்பதன் அடையாளமாக ஏற்றுக்கொள்ள முடியாது. யேசுவும் தன் வாழ்வில் பல துன்ப அனுபவங்களை பெற்றிருந்தார். ' தாய் மறந்தாலும் நான் மறவேன்'' (இசை 49 : 15). துன்பம் என்பது ஒரு போராட்டம். துன்ப வேளையில் யேசுவோடு ஒன்றித்து இருந்து துன்புறும் கிறிஸ்துவில்தான் நம் துன்பத்துக்கு பொருள் காண வேண்டும். துன்ப விளைவுக்கு பதில் சிலுவை. அவர் பின்னால் நாம் சிலுவையை தூக்கி சென்றால்தான் நமது போராட்டம் வெற்றியடையும். ''தாம் அவரோடு துன்புற்று மாட்சியை பெறுவதற்காக இன்னும் உலகில் பயணம் செய்து துன்ப துயரங்களில் அவரது அடிச்சுவட்டில் நடந்து தலையோடு உடல் ஒன்றித்திருப்பதுபோல் அவருடைய பாடுகளிலும் ஒன்றித்திருக்க வேண்டும்'' (வர்த்திக்கான் சங்க ஏடு, இ. உ. தி. எண். 7). ''மனித சரித்திரத்தின் நோக்கமும் முழுமையும் அதை ஸ்தாபித்த கிறிஸ்துவில் தான் தங்கியிருக்கிறது என்பதை திருச்சபை நம்புகிறது அது மட்டும் அல்ல, எல்லா மாற்றங்கள் மத்தியிலும் நேற்றும், இன்றும், என்றும் மாறாத கிறிஸ்துவில்தான் தன் அடிப்படையைக் கொண்டிருக்கிறது என நம்புகிறது (இ உ. தி 10 ). இவ்வாறு வத்திக்கான் சங்க ஏடுகளும் துன்பம், தீமை, சாவு இவற்றின் பொருள் யாது? என கேள்வி கேட்டு பதில் காண்கிறது.

என் துன்பத்துக்கு காரணம் இந்த ஆள், இந்த நிகழ்ச்சி என்றும் விதியின் சதிக்கே இறைவன் என்னைக் கைவிட்டு விட்டார் என்றும் எண்ணுவது மடமையாகும். துன்பம் கடவுளிடமிருந்தோ மற்றவர்களிடமிருந்தோ வருகின்றது என நினைப்பதை விட துன்பத்தை நமது உடலின் அங்கம் போல் நினைக்க வேண்டும். துன்பம் சுமையாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைக்கு எதிரான ஒன்றாகவும் இருப்பதால் அதைத் தீவினையின் பயன் என்று கருதுகின்ற நாம் ஏன் நல்வினையின் பயன் என்றும் கருதத் முற்படக் கூடாது. துன்பங்கள் இயற்கையாலும் மற்ற மனிதராலும் வருகின்றன என்று நாம் அறிந்தாலும் துன்பம் வந்தவுடன் இறைவனிடம் தான் நாம் கேள்வி கேட்கிறோம். எல்லாவற்றிற்கும் ஆதி காரணன் இறைவன் என்பதால் இவ்வாறு சிந்திக்கப் பழகி விட்டோம். இருந்தாலும் நல்லவராகிய இறைவனிடம் இருந்து எவ்வாறு துன்பம் வர முடியும் என்ற கேள்விக்கு எங்கள் அனுபவங்களில் விடைகாண முடியாமல் போய்விடுகிறது. துன்பம் எப்போதும் தொடர்கதை போன்றது. ஒரு துன்பம் முடிய இன்னுமொரு துன்பம் நிச்சயமாக வரத்தான் போகிறது. எப்போதும் இறைவன் நம்மைத் துன்பத்திலிருந்து விடுவிப்பவராக பார்க்க முற்பட வேண்டும் துன்பம் ஒரு தொடர்கதை அன்றோ! அப்படியாலல் துன்பத்தின் முடிவு எனை என்ற கேள்விக்கு விடை காணப்பட வேண்டியதொன்றாகும். தொடர்ந்து துன்பம் வந்து கொண்டேயிருக்க தொடர்ந்து நாம் துன்பத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டே இருக்கவேண்டும்.

யேசுவுக்காக துன்பங்களை அனுபவிக்கவேண்டும். மனிதனை மீட்க துன்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசுவை முன்மாதிரிகையாக்கிக் கொள்ளவேண்டுமெனபதால் நாம் துன்பப்படவேண்டும். யேசுவிற்காக, அவரது அன்பிற்காக துன்பங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். துன்பங்களை யேசுவின் வாழ்விலிருந்து பிரித்துப் பார்ப்பது மாற்றப்படவேண்டும். யேசுவின் வாழ்வோடு துன்பமும் இணைந்து இருந்தது என்பதை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும் நான்கு நற்செய்தியாளர்களும் யேசுவின் பாடுகளுக்கு துன்பங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். யூதர்கள் அந்நிய ஆட்சியில் பல துன்பங்களை அனுபவித்தார்கள். ஆதிக் கிறிஸ்தவர்கள் பல கடினமான துன்ப அனுபவங்களைப் பெற்றார்கள். யேசுவின் பாடுகள் வழியாக அக்கிறிஸ்தவர்கட்கு ஆறுதல் கொடுக்க வேண்டுமென்பது அவர்களுடைய சிந்தனையில் எழுந்ததொன்றாக இருக்கலாம். அது அன்றைய சூழ்நிலைக்கு உரியது. அதற்காக இன்று யேசு துன்புற்றார், எனவே நாமும் துன்புறுவோம் என்று கூறுவதைக் காட்டிலும் யேசு எதற்காக துன்புற்றார், அவரைப்போல நாமும் செயற்படுவோம் என்று கூறுவது முக்கியமானது.

யேசுவும் தன் வாழ்வில் நீதிக்காக துன்புற்றார் என்பது தெளிவாகிறது. யேசுவின் வாழ்வில் நடந்தவை எல்லாம் நற்செய்தி ஏடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பொறிக்கப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க இயேசு துன்பங்களைத் துடைக்க முற்பட்டார் என்பதை முக்கிய கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

முடிவுரை

சுருக்கமாகச் சொல்வதானால் கணிதவியல் போன்றதல்ல இறையியல். சில வினாக்களுக்கு இறையியலில் நேரடியான பதில் உண்டு சிலவற்றின் பதில் விசுவாசத்திலே தான் காணப்படவேண்டும். சில துன்பங்கட்கு பொருள் புரியவில்லை என்பதை நேர்மையோடு ஏற்றுக் கொள்வதோடு எல்லாத் துன்பங்கட்கும் விடை கிறிஸ்துவே என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். துன்பமும் சாவும் பாவத்தின் விளைவாக வந்தவை. பாவத்தின் அழிவோடுதான் இவையும் அழிக்கப்படலாம். தொடர்ந்து நாம் பாவத்திலிருந்து விடுதலை பெறுவது போல் தொடர்ந்து துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறவேண்டும்.

★

"ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்துயிர்த்தனன் நான் ஒரு மூன்றில்"—என்று உலகிற்கு அறிவித்து,
"தேசத்தீர் இதன் உட்பொருள் கேளீர்" — என்று மக்களுக்கு கூறி,
யேசுவின் உயிர்ப்பிலிருந்து நான் உணர்ந்த உண்மையாக,

"நாம் நம் அகந்தையைக் கொன்றுவிட்டால், தேவர் வந்து
நமக்குள் புகுந்து நாசமின்றி நம்மை நித்தம் காப்பார்" என்கிறார்.

மகாகவி பாரதியார்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைத்தனமும் விடுதலையும்

அருள்சகோதரர் ப. டெஸ்மன் குலாஸ்
(இறையியல் 4-ம் ஆண்டு)

"என்று தணியும் இந்த சுதந்திர தாகம், என்று நீங்கும் இந்த அடிமைக் கோலம்? இன்று எல்லா மக்களின் உள்ளங்களின் ஆழத்தில் எழும் அங்கலாய்ப்பின் விளைவுதான் இந்தக் கேள்விகள். நாங்கள் ஒடுக்கப்படுகின்றோம் என்ற உணர்வு ஏற்படும்போது இதிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற விழிப்புணர்வு தானாகவே பிறக்கின்றது. அடிமைத் தளைகளைத் தகர்த்தெறிந்து விட்டு விடுவிக்கப்பட்டவாழ்வில் வளர வேண்டும், என்ற துடிப்பு ஏற்படுகின்றது. இந்த விடுதலையைத் தான் எல்லா மறைகளும், மீட்பின் செய்தியாக ஒரு சவாலாக மக்களுக்கு அறைகூவல் கொடுக்கின்றன. ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு மனித சமுதாயமும் எல்லா அகப் புற அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை பெற்று சுதந்திரமாக முழு மனித வாழ்க்கை வாழவேண்டும் என்பதே கிறிஸ்து நமக்கு கூறும் செய்தி. ஆனால் நமது சமூகத்திலே இந்த விடுதலை என்பது ஒரு குறுகிய சிந்தனையுடன், வெறும் அரசியல் பின்னணியில் மட்டும் அமைந்த போராட்டமாக மாறிவருவது கவலைக்குரியது. இந்த விடுதலைப் போராட்டம் முழு மனித சுதந்திரத்தை கொடுப்பதை விடுத்து அடிமைத் தனத்தை அதிகரிக்கச் செய்கின்றது. குளிக்கப் போய், சேறு பூசிக்கொண்ட இந்நிலை, மக்களுக்கு பெரும் வேதனையளிக்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

விடுதலை என்பது, மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் போன்ற அடிமைத்தனங்களிலிருந்து மட்டுமல்ல, பகைமை அநீதி அடக்குமுறை போன்ற எல்லா தீமைகளின் பிடியிலிருந்தும். பாவத்திலிருந்தும் விடுதலை பெறுதலாகும். விடுதலை என்பது எல்லோர்க்கும் உரியது. கிறிஸ்துவும் மனிதர் எல்லோரும் முழு மனித விடுதலையை அடைய வேண்டுமென்றே விரும்பினார். அவர் பணியை, அடிமைத் தனங்கள் நிறைந்த ஒரு காலகட்டத்திலே நம்பிக்கையின் இறைவாக்கினராக ஆரம்பித்தார் அடிமைத்தனத்தில் உழன்ற சமூகத்தை தட்டி எழுப்புவராக, சமூக நிலையை மக்களுக்கு உணர்த்துபவராக, ஒரு மகிழ்ச்சியின் வாழ்க்கையை மக்களுக்கு காட்டுவபராக யேசு தன் பணியை தொடங்கினார். அவர் மீட்பின், நேரம் வந்துவிட்டதை அறிவித்தார் இறையரசை வரவேற்க "மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்று அழைப்பு விடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய மீட்பும் இந்த உலகிலேயே தொடங்கியுள்ள காரணத்தால் மீட்பின் வரலாறும் உலக வரலாறும் ஒன்றோடொன்று தொடர்புடையன. மீட்பு வரலாற்றிலே இறைவன் இஸ்ராயேல் மக்களை எகிப்து நாட்டினின்று விடுவிப்பதை பார்க்கின்றோம். இன்னும் அன்னியர் முற்றுகை, நாடுகடத்தப்படல் போன்ற கசப்பான, துன்பமான இன்னல்கள் மத்தியில் அவர்கள் வாழ்ந்த போதும் இறை பராமரிப்பு அவர்களை வழிநடத்துவதைக் காண்கின்றோம். அடிமைத்தனத்தையும் விடுதலை வாழ்வையும் இறைவன் அவர்களுக்கு மெல்ல மெல்ல புரியவைத்து, தம் அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகின்றார். இஸ்ராயேல் மக்களும், இறைவன் அவர்களை மீட்கும் நேரத்தில் சமாதானம், நீதி சகோதரத்துவம் நிறைந்த புதுவாழ்வை எதிர்பாத்து காத்திருந்தனர். புதிய உடன்படிக்கை, புதிய இறைமக்கள், புதிய வாழிபாடு, புதிய காணிக்கை, என்று ஈற்றில் எல்லாம் புது படைப்பாக மாறும் என்று எதிர்பாத்தனர். இதுவே கடவுளின் அரசுக்கு அடையாளமாகவிருந்தது.

யேசுவின் அறை கூவலும் இத்தகையதொரு சமாதானம், நீதி சகோதரத்துவம் நிறைந்த அரசை நோக்கி நம்மை இட்டுச் செல்லும் அழைப்பாக இருந்தது. "சிறு மந்தையே அஞ்சாதே, ஏனெனில் உங்கள் தந்தை தம் அரசை உங்களுக்கு கொடுக்கத் திருவுளம் கொண்டுள்ளார்" என்று நம்பிக்கையின் உறுதிமொழியை மக்களுக்கு அறிவித்தார். யேசு தம் பணியின் தொடக்கத்தில் மட்டுமல்ல, தம்முடைய வாழ்க்கை நிகழ்வுகள் ஊடாக மனிதனை எல்லா அடிமைத்தனத்திலிருந்தும் மீட்க வேண்டும் என்றார். முழு மனித விடுதலையை நோக்கி மனிதன் அழைத்துச் செல்லப்பட வேண்டும் என்ற செய்தியை ஆணித்தரமாக கூறினார். அடக்குமுறை, பலாத்காரம், அநீதி, துன்புறுத்தல், சுரண்டல் வெறுப்பு நிறைந்த இடத்தில் கடவுளின் அரசு இருக்க முடியாது. மனிதன் ஆன்ம வாழ்விலிருந்து மட்டுமல்ல, முழு மனித வாழ்விலும் அதாவது, தனி, சமூக, பொருளாதார அரசியல் விடுதலையையும் அடைய வேண்டுமென்று விரும்பினார். இதனால் நோய்களை குணமாக்கினார், பசித்தோரை நலன்களால் நிரப்பினார், அசுத்த ஆவிகளை விரட்டினார், பாவிகளை மன்னித்தார், சமூகத்தில ஒதுக்கப்பட்டோரை ஆதரித்தார், ஒடுக்கப்பட்டோருக்காக குரல் கொடுத்தார்.

மக்களின் அடிமைத்தனங்களைக்கண்டு அவரால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. மக்களைப் பிழையான வழியில் நடத்துவோரைக் கண்டு அவர் மனம் பொறுக்கவில்லை அவரால் அநீதிகளை கண்டு எதிர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் இருக்கவில்லை. அவர் நம்மை அடிமைத்தனத்திலிருந்திருந்து விடுவிக்கவே மீட்பராக வந்தார். இதனால் அவர் அதிகாரத்தோடு பேசினார். வீரத்துடன் கண்டித்தார்.

''அவர் சென்ற இடமெல்லாம் மக்களுக்கு நன்மை புரிந்து வாழ்ந்தார்''. எது உண்மையான மதம் என்றும், எது உண்மையான சட்டம் என்றும் எடுத்துரைத்தார். இவ்வாறு எடுத்துரைத்தவர் அதை வாழவும் பின்நிற்கவில்லை. நாங்கள் வாசிக்கின்ற நற்செய்தியும் யேசுவை ஒரு இரக்கம் நிறைந்தவராக, மக்கள் பால் ஈர்க்கப்பட்டவராக மக்களை உணர்ந்தவராக காட்டுகின்றது. மக்கள் ஆயன் இல்லாத ஆடுகள் போல் இருந் தைக் கண்டு மனமிரங்கினார். வருந்திச் சுமை சுமப்போரே என்னிடம் வாருங்கள், உங்களை நான் இளைப்பாற்றுவேன் என்றுதான் கூறினார். உங்கள் மேல் மேலும் பாரத்தைச் சுமத்துவேன் என்று கூறவில்லை. மக்களின் தேவை அறிந்து பணிபுரிந்தார். மக்கள் அவரை பின் தொடர்ந்தபோது. அவர் அவர்களுக்கு மீட்பின் செய்தியை போதித்தார், நோயுற்றோர் அவரை அணுகியதும் அவர்களைக் குணப்படுத்தினார். பேய்களின் ஆதிக்கத்திலிருந்தும் மக்களுக்கு விடுதலை கொடுத்தார். இவ்வாறாக, மக்களுக்கு இறையரசின் வெற்றியை வெளிப்படுத்தினார். இதுவே வரவிருக்கும் விடுதலையின் அடையாளமாகவும், இறைவனின் அன்புப் பிரசன்னத்தின் வெளிப்படுத்தலாகவும் அமைந்தது. நாமெல்லாம், புது படைப்புகளாக மாறுவதற்கு தம்மை இறைத் திட்டத்திற்கு முழுக்க முழுக்க கையளித்தார் யேசு, ''முழு நிறைவும் அவரில் குடிகொள்ள வேண்டுமென்று இறைவன் திருவுளம் கொண்டார், சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தால் விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர் தம்மோடு ஒப்புரவாக்க விரும்பினார்'' (கொலோ 1:19-20).

இவ்வாறு புது படைப்பாக மாற, படைப்பின் சிகரமாகிய மனிதன் அழைக்கப்படுகின்றான். இவ்வுலகை நீதி சமாதானம் சகோதரமிக்க களமாக மாற்றுவதே அவன் பணி. மாறாக மனித மாண்புகள் அழிக்கப்பட்டு, இரத்தக்களரி படிந்த ஒரு களமாக அதனை மாற்றுவது தவறு. இந்த புது படைப்பின் பயணம் ஒரு கற்பனை விடுதலை அல்ல இது ஒவ்வொரு மனிதனதும் அன்றாட வாழ்வின் உண்மை நிலைப்பாடுகளை உள்ளடக்கிய விடுதலையாகும். அதோடு வரவிருக்கும் உலக முடிவிற்கு நம்மை ஆயத்தம் செய்யும் வாழ்க்கையையும் உள்ளடக்கிய வாழ்வாக அமைகின்றது. யேசு நமக்கு தரும் அழைப்பு, வெறும் கொள்கையளவிலான அறைகூவல் மட்டுமல்ல, ஏனென்றால் அவர் தம்முடைய வாழ்க்கையையே விடுதலையின் அழைப்பாக ஏற்றுக்கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார். அத்தோடு தம்முடைய பாடுகள் மரணம், உயிர்ப்பு வழியாக நம் ஒவ்வொருவரின் முழு மனித விடுதலை வாழ்வுக்கும் அத்திவாரமிட்டுள்ளார்.

திருச்சபை இன்றைய உலகின் அருட்சாதனம். திருச்சபை உண்மையான அருட்சாதனமாக விளங்க வேண்டுமாயின் யேசுவின் விடுதலைச் செய்தியாகிய, முழு மனித விடுதலையின் செய்தியைப் பறைசாற்றுவது இன்றியமையாத கடமையாகும். ஆகவே எல்லாத் தீமையான அடிமைத்தனங்களுக்கும் அடிப்படை காரணமாகிய பாவப் பிடியிலிருந்து மக்களை மீட்பதே திருச்சபையின் பணி. இந்த பாவ பிடியில் அகப்பட்டு தத்தளிக்கும் மக்களை மீட்பதே திருச்சபையின் அழைப்பாகும். இந்த பாவ நிலைக்கு பின்னணியில் இருக்கும் எல்லா தீமையான சமூக பொருளாதார அரசியல் அமைப்புகளிலிருந்தும் மக்கள் விடுவிக்கப்பட வேண்டும். சமூக சுரண்டல், புறக்கணிப்பு, சாதி, இனவெறி, விபசாரம். அளவுக்கு மீறிய பொருளாசை, மித மிஞ்சிய களியாட்டம் என்பனவற்றிலிருந்தும் மக்கள் விடுதலை பெற வேண்டும் இவ்வாறான அநீதியான, அடக்கு முறைகள் நிறைந்த ஒரு சூழ்நிலைதான் பாவச் சூழ்நிலையாகும். இந்த பாவமான சூழ்நிலையிலிருந்து புது உலகைப் படைப்பதே உண்மை விடுதலையாகும். மக்கள் துன்புறுத்தப்படும் போது மனித மாண்புகள் மறுக்கப்படும் போது, மனித உயிர்கள் கண்மூடித்தனமாக அழிக்கப்படும் போது, மனிதனுடைய உரிமைகள் அடக்கி ஒடுக்கப்படும் போது, எங்ஙனம் மனிதன் விடுதலையடைய முடியும்? சமய மதிப்பீடுகளும் சரி சமூக மதிப்பீடுகளும் சரி மக்களை வளர விடாமல், அவர்களை அடக்கி ஒடுக்குமாயின் மனித விடுதலையை எங்ஙனம் அடைய முடியும்? இறைவன் ஒவ்வொருவரையும் தன் பிள்ளையாகப் பேணிக்காக்கும் போது, ஒவ்வொரு மனிதனும் அன்போடும் கருணையோடும் நடத்தப்பட வேண்டும் என்ற உண்மையை நாம் மறந்து வாழலாமா? ஆகவே திருச்சபையும் இவ்வாறு மக்களது பாவச் சூழ்நிலையிலிருந்து மக்களுக்கு விடுதலையளிக்க முற்படும்போதுதான் மீட்புப்பணியில் தன்னுடைய பங்களிப்பை கொடுக்க முடியும். புதியதோர் உலகை படைப்பது திருச்சபையின் அங்கத்தவர்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமையாகின்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின், 'இன்றைய உலகில் திருச்சபை' என்னும் கொள்கைத்திரட்டு கூறுகிறது, ''உலக ஒருமைப்பாட்டையும் உண்மை, நீதி சகோதரத்துவம் அவற்றை அடிப்படையாகக் கொண்ட உயர்ந்ததோர் உலகை உருவாக்குவதை நம்முடைய கடமையாக நம் கண்முன் கொண்டோமென்றால், நாமே நம் சமூக உருவாகத்தின் சிற்பிகள் என்ற

உண்மை நன்கு தெளிவாகும். இவ்வாறு, ஒரு புதிய மனித நல கோட்பாட்டின் பிறப்புக்கு சாட்சிகளாய் திகழ்வோம்'' இவ்வாறு புதியதொரு சமுதாயத்தை படைப்பதற்கு முயற்சி செய்வதே நம்முடைய மீட்பு வாழ்வுக்கும் அடிப்படையானதாகும்.

எவ்வாறு கிறிஸ்து, தம்முடைய மரணம் உயிர்ப்பு வழியாக நமக்கும் இறைவனுக்கும் இடையுள்ள உறவை புதுப்பித்தாரோ, திருச்சபையும் நம்மை இறைவனிடம் சேர்க்கும் ஊடகமாக அமைகின்றது. அலகையினுடையவும் பாவத்தினுடையவும் அடிமைத் தளையின்று நம்மை விடுவிக்க தூண்டுகின்றது. கிறிஸ்துவில் நம் முழு மனித விடுதலை நிறைவு பெற நம்மை அழைக்கின்றது. பாவத்திலிருந்து அருளிற்கு, இறப்பிலிருந்து வாழ்விற்கு, அநீதியிலிருந்து நீதிக்கு, கீழான மனித தன்மையிலிருந்து மனித மாண்புக்கும் ஒவ்வொரு மனிதனும் பூரணமாக விடுதலை பெற்று வாழ வேண்டுமென்று திருச்சபை நம்மை வேண்டுகின்றது.

மனிதனாய் பிறந்த ஒவ்வொரு மனிதனும், முழு மனித விடுதலையின் இலக்கை நோக்கி செல்லும் பயணியாகவே இருக்கின்றான் ''ஏதோ பிறந்தோம், ஏதோ வாழ்ந்தோம்'' என்பதல்ல நம் வாழ்க்கை, நம் அழைப்பு. நமது முழுமனித வாழ்வை அடிமைத் தளைகளிலிருந்து மீட்டெடுக்கும் போது தான் நமது வாழ்க்கை நிறைவடைகின்றது அர்த்தம் பெறுகின்றது.

இறைவன் தாம் படைத்தவை எல்லாவற்றையும் நல்லதெனக் கண்டார். ஆனால் அவர் படைத்த வளங்கள் ஒரு சிலரால் அனுபவிக்கப்படும் ஏக போக சொத்துகள் ஆகி விட்டன. இறைவன் மனிதனை படைக்கும் போது, எல்லாப் படைப்புகளுக்கும் மேலான மாண்புடன் படைத்தார். பறவைகளைப் போல் அடுத்த நாளைப்பற்றி கவலைப்படாதிருந்த மனிதன் இப்போது அடுத்த நிமிடம் என்ன நடக்குமோ என அங்கலாய்க்கின்றான். இறைவன் மனிதனுக்கு அளித்த மாண்புகள் எங்கே? இந்த மாண்புகளெல்லாம் அழிக்கப்பட்டு எந்த சவக்குழிக்குள் அடங்கி கிடக்கின்றன? நம் பிறப்பிலே இறைவனால் கொடுக்கப்பட்ட மனித சுதந்திரங்கள் எங்கே? இந்த சுதந்திரங்களையெல்லாம் விலங்கிட்டு யார் சிறையில் அடைத்து வைத்திருக்கின்றார்கள்? இறைவன் நாம் எல்லோரும் வாழ வேண்டுமென்றே விரும்புகின்றார். இன்று நம்மிடையே எத்தனை பிளவுகள்; பிரிவுகளுக்கிடையில் எத்தனை பிரிவுகள். இத்தனை பிரிவுகள் நம் விடுதலையின் இலக்கு என்ன ஆகும்! நாம் படைக்கப்போகின்ற முழு மனித விடுதலையின் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் எங்ஙனம் உருவாகும்? நம்முடைய மதம், கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம், அந்தஸ்து ஆகியன, நமக்கு உண்மையான முழு மனித விடுதலைக்கு வழிகாட்டாமல் நம்மை மேலும் அடிமைகளாக மாற்றுமாயின் அவற்றை பின்பற்றுவதால் நமக்கு என்ன பயன்? அடிமைத் தனங்களை நியாயப்படுத்தி மக்களின் சிந்தனைகளை மழுங்கடிக்கும் எந்த மதமோ, கலாச்சாரமோ, பண்பாடோ, நாகரீகமோ, மக்களின் வளர்ச்சிக்கோ முழு மனித வாழ்வுக்கோ பயனளிக்கப் போவதில்லை. சமூகத்தின் நன்மைக்காக சமூக மதிப்பீடுகளை பேணிக் காக்கின்றோம். இன்றைய சமூக மதிப்பீடுகள் என்று கூறி நாம் மனிதனை விட பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். பெண்களை விட பெண்கள் கொண்டு வரும் சீதனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். நம்முடைய சில வரட்டு கௌரவங்களுக்கு பல உயிர்கள் பலியாவதை நியாயப்படுத்துகின்றோம். இவ்வாறே ஆட்சிக்கு வருவதற்கு அரக்கத்தனங்களையும் அனுமதிக்கின்றோம். நாம் எம்முடைய பிழைகளை ஏற்றுக் கொள்ள தயாரில்லை. அதே வேளையில் மற்றவர்களுடைய நன்மைத்தனங்களை பாராட்டவும் துணிவில்லை, எம் பிழைகளுக்கு மன்னிப்பு கேட்கவும் துணிவு இல்லை. அதே வேளையில் எம் பிழைகளை நியாயப்படுத்தி அநீதிகளை ஆதரிக்கின்றோம். இவ்வாறெனில் கிறிஸ்து காட்டிய முழு மனித விடுதலையின் வாழ்வு நம்மில் எப்போது மலரப் போகின்றது. கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் விடுதலையின் அழைப்பை நாம் கேட்கத் தயாரா?

நம்முடைய மனத்தில் உள்ள பழி வாங்கும் வன்மம் மறைந்து ஒருவரை ஒருவர் ஏற்று வாழும் சமூகத்தை கட்டியெழுப்புவோம். எம் மத்தியில் வாழும் துன்புறுவோர், பாதிக்கப்பட்டோர் விடுதலை பெற உழைத்திடுவோம், கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் பழிவாங்கலை விடுத்து, எத்தனை முறையும் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் விடுதலையின் வாழ்வை வாழ்வோம். ஒவ்வொரு மனிதனுக்குரிய மனித மாண்புகளை அறிந்து, பிறர் மட்டில் அன்பு, சமாதானம், சகோதரத்துவம் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழும் இறைமக்களாக உரிமையுடன் வாழ்வோம். அப்போதுதான் நாம் இறைவனைப் பார்த்து எங்கள் தந்தையே, இதோ உம் பணிக்கு நாம் என்று எம்மைக் காணிக்கையாக்க முடியும். இந்த விடுதலையின் அழைப்பு இவ்வுலக வாழ்வோடு முடிந்து விடும் ஒரு சமூக அழைப்பு மட்டுமல்ல, இது இறைவனை நோக்கிச் செல்லும் அழைப்பு. எம் வாழ்வை எம் ஆளுமையை, எம் ஆற்றல்களை, திறமைகளை முழு மனித வாழ்வுக்கு அர்ப்பணிப்பதன் மூலம் உலகைப் புதுப்பிக்கும் பணிக்கு எம்மை அர்ப்பணிக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த துன்பமோ, இன்னல்களோ வந்தாலும், இறைவனோடு ஒன்றித்திருந்து எம்மை முழுவதுமாக கிறிஸ்துவைப்போல் இறைத் தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

"இதோ இறைவா, உம் திருவுளத்தை நிறைவேற்ற வந்து விட்டேன்." (எபிரேயர் 10, 7)

இன்றைய சமூகத்தை ஆட்டிப்படைக்கும் எல்லா அக, புற அடிமைத்தனங்களிலிருந்தும், தீய சக்திகளிலிருந்தும் விடுவிக்கும் யேசுவின் வல்லமையையும் அவர் அளிக்கும் அடிப்படைச் சுதந்திரத்தையும் நுகர்ந்து அறிந்து செயற்படுவோம். யேசுவின் உயிர்ப்பானது எல்லா அடிமைத்தனத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வெற்றியாக அமைகின்றது. யேசுவின் வாழ்க்கையும் உயிர்ப்பும் நம்முடைய விடுதலைக்கும் நம்பிக்கையாக அமைகின்றது. நாமும் அழைக்கப்படுகின்றோம்! யேசு காட்டிய பாதையில் செல்வதற்காக. முழு மனித விடுதலையின் வாழ்வு எல்லோருக்கும் உண்டு என்பதை அறிவிக்கும் தூதர்களாக நாம் எம்மை அர்ப்பணிப்போம்.

★

"சிலுவையிலே மனது வைத்தால்
சிந்தனை தெளிவாகும்;
சிந்தையிலே அமைதி வந்தால்
வந்தது சுகமாகும்".

படம் : தாயே உனக்காக

★

" மரித்தும் எழுந்த சத்தியமே
மரணம் இம்மையின் தத்துவமே".

தமிழப்பெரியார் திரு. வி. க. அவர்கள்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கா ஒரு பயணம்

அருள்திரு. A. பிலிப்

**இஸ்ராயேல் மக்களின் பாஸ்கா**

இஸ்ராயேல் மக்களின் வரலாறு ஆபிரகாமோடு ஆரம்பமாகின்றது. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு இவர்களின் வழியாகப் பேசிய இறைவன் தமது மீட்புத் திட்டத்திலே குசையின் வழியாக அவர்கள் எகிப்து நாட்டில் குடியேறவும் படிப்படியாக அடிமைகளாகி அங்கு வேதனைப்படவும் வேண்டுமென விரும்பினார். இஸ்ராயேல் மக்களோ இறைவன் ஒருவரே மீட்பரென்ற விசுவாசத்தில் அந்தக் கடவுளிடம் தம் மீட்புக்காகக் குரல் எழுப்பினார்கள். அவர்களை எகிப்தியரின் அடிமைத் தனத்திலிருந்து மீட்க இறைவன் மோயீசனைத் தெரிந்து கொண்டார். எகிப்திய அரசனான பார்வோனிடம் மோயீசன் சென்று இஸ்ராயேல் மக்களை விடுவிக்கும்படி கேட்க அரசனோ மறுத்தான். இறைவன் மோயீசன் வழியாக பத்துப் புதுமைகளைச் செய்தார். பத்தாவது புதுமை மட்டும் அரசனின் மனம் மாறவில்லை. பத்தாவது புதுமையாக எல்லாக் குடும்பத்திலும் முதல் பிள்ளை கொல்லப்பட்டதாலும் அதனாலே அரசனே தம் மகனை இழந்ததாலும் அவன் அந்த மக்களைப் போகவிட்டான்.

இஸ்ராயேல் மக்களோ தங்கள் பயணத்துக்கு ஆயத்தமாக மறுவற்ற, ஆண்பாலான ஒரு வயது நிரம்பிய ஆட்டுக்குட்டியை அறுத்து, அதன் இரத்தத்தைக் கதவுநிலையிற் பூசி, அதன் இறைச்சியைச் சுட்டுக் காட்டுக் கீரைகளோடும், புளியாத அப்பங்களோடும் நின்ற வண்ணமே உண்டு புறப்பட்டார்கள். அவர்களின் பயணப் பாதையில் செங்கடல் குறுக்கே நின்றது. அத்தோடு அரசனும் தன் மனத்தை மாற்றி மீண்டும் இஸ்ராயேல் மக்களை அடிமைப்படுத்தத் தன் படையை அனுப்பினான். படையோ அவர்களைப் பின்தொடர்ந்தது. இக்கட்டான இந் நிலையிலும் இறைவன் அவர்களோடிருந்து கடலைப் பிரித்து அவர்களின் கால்கள் நனையாமல் அவர்களை நடத்தி அக்கரை சேர்த்தார். படைகள் வரும்பொழுது கடலை மூடி அவர்களை அழித்துப்போட்டார். அரசனின் பிடியிலிருந்து தப்பியவர்களை இறைவன் இரவிலே நெருப்புத்தூணாகவும் பகலிலே மேகத் தூணாகவும் நின்று வனாந்திரத்திலே வழிகாட்டினார். அவர்களோ நாற்பது ஆண்டுகள் நடக்கவேண்டியிருந்தது. வேதனைகள் நிறைந்த பயணம் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தூரப் பயணத்தில் களைப்பு ஒருபுறம், பசி இன்னுமொரு புறம், தாகம் இதற்கிடையில். மோயீசனிடம் அவர்கள் முறையிட்டார்கள். இறைவனை மட்டில் இடறல்பட்டார்கள். இறைவனே அவர்களுக்கு மன்னாவையும் காடைக் குருவிகளையும் உணவாகக் கொடுத்துப் பாறையிலிருந்து நீரையும் குடிக்கக் கொடுத்து அவர்களின் துயர் தீர்த்தார்.

ஆண்டுகள் பல நடந்து சீனாய் மலையடிவாரம் வந்து சேர்ந்தார்கள். இம் மலையிலேதான் இறைவன் மோயீசனோடு எரியா முட்செடியிலிருந்து முன்னொரு முறை பேசினார். இதே மலையிலேதான் இறைவன் இப்பொழுது பத்துக் கட்டளையும் கொடுத்தார். மோயீசனே மலையடிவாரத்தில் இஸ்ராயேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் பன்னிரண்டு கற்களால் ஒரு பீடமமைத்து உடன்படிக்கைப் பலியை ஆடு மாடுகளின் இரத்தத்தினால் நிறைவேற்றினார். ஆண்டுகள் செல்லச் செல்ல இறைவன் மட்டிலுள்ள அவர்களின் ஆர்வம் குன்றிப்போனது. அவர்களோ தங்களிடமுள்ள நகைகளைச் சேர்த்து ஒரு கன்றுக்குட்டியைச் செய்து அதுவே அவர்களின் தெய்வம் என்று வணங்கினார்கள். அவர்களின் குருட்டுத் தனத்தையும், முரட்டுத் தனத்தையும் கண்டு இறைவன் அவர்களை அழித்துவிட விரும்பினார். மோயீசன் அவர்களுக்காக இறைவனிடம் பரிந்து பேசி மன்னிப்புப் பெற்றுக் கொடுத்தார்.

வேறொரு தருணத்தில் அவர்களை நச்சுப் பாம்புகள் கடித்ததினால் பலர் மாண்டுபோகும் தருவாயிலிருந்தனர். மோயீசனே வெண்கலத்தால் ஒரு பாம்பைச் செய்து கோலில் பொருத்தி அதை உயர்த்தினார். அதை ஏறெடுத்துப் பார்த்தவர்கள் பாம்புக்கடியிலிருந்து குணம் பெற்றார்கள்.

பயணம் தொடர்ந்தது. இறைவன் அவர்களுடன் பயணம் செய்தார். இதை உறுதிப்படுத்த ஒரு பேழையைச் செய்து அதனுள் மன்னாவையும், ஆரோனின் கோலையும், 10 கற்பனைப் பலகையையும் வைத்துத் தூக்கிக்கொண்டு சென்றார்கள். கூடாரமடித்துத் தங்கிய போதெல்லாம் இறைவனின் திருப்பேழைக்கும் ஒரு கூடாரம் அடித்தார்கள்.

கானான் தேசத்தை நெருங்கி வரவர மோயீசனே வயது முதிர்ந்தவராய் தன் காலத்தை முடித்துக்கொண்டார். அவரைத் தொடர்ந்து யோசுவா அவர்களின் தலைவராகவும், வழிகாட்டியாகவும் வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கானான் தேசத்தை இறைவனின் வல்லமையால் கைப்பற்றினார்கள். பாலும் தேனும் பொழியும் நாட்டினுள் மீண்டும் சென்றார்கள்.

இவ்வாறு எகிப்திலிருந்து கானானுக்கு இறைவன் இவர்களைக் கடத்திக் கொண்டு வந்த நிகழ்ச்சியை இவர்களால் மறக்கமுடியாது. இது இவர்களது வாழ்வின் அழியா அனுபவமாகவும், நினைவாகவும் இருந்ததினால் இறைவனின் மாபெரும் இச்செயலைத் தங்கள் பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் மறைக்கல்வியாகப் புகட்டி வந்தார்கள். இக்கடத்தல் நிகழ்ச்சியை இவர்கள் ஒரு விழாவாகவும் கொண்டாடினார்கள். ஆண்டுக்கொரு முறை ஜெருசலேம் சென்று தங்கள் வனாந்தர வாழ்வை நினைவுபடுத்திக் கூடாரங்களிலே தங்கி இந்த விழாவைப் பாஸ்கா விழா என அழைத்துக் கொண்டாடி வந்தார்கள்.

இயேசுக் கிறிஸ்துவின் பாஸ்கா

கிறிஸ்துவின் வாழ்வில் பல தடவைகளில் அவர் ஜெருசலேம் சென்று இஸ்ராயேலரின் பாஸ்கா விழாவில் கலந்து கொண்டிருக்க வேண்டும். 12-ம் வயதிலே தன் பெற்றோருடன் அங்கு சென்றிருக்கின்றார். மத்தேயு, அருளப்பர் ஆகியோர் எழுதிய நற்செய்தி ஏடுகளில் அவர் அங்கு பல தடவைகளில் பிரசன்னமாயிருந்ததைக் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் இறுதித் தடவையாக அவர் ஜெருசலேமுக்குச் சென்றது மிகப் பின் சிறப்புத் தன்மை வாய்ந்தது. தம்முடைய மரணத்துக்கு அவர் அங்கு சென்றார். வீதியிலே வெள்ளை விரித்து 'வாழ்க' என்று விளம்பரம் செய்து அவர் ஜெருசலேமுக்குள் சென்றது ஒரு அரச பவனியாகவே இருந்தது.

பாடுகளின் நேரம் நெருங்கிவர பிரியாவிடை விருந்து இடம் பெற்றது, யெருசலேமிலே மக்கள் பாஸ்கா விழாவுக்காகக் கூடியிருந்த நேரமது. இது ஒரு இரவு நேரம். விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்துவிட்டது. எல்லோரும் விருந்து அறைக்குள் சென்றார்கள். விருந்துக்கு முதல் வேடிக்கையான ஒரு நிகழ்ச்சி இடம் பெற்றது. அதுவே யேசு தம் சீடர்களின் பாதங்களைக்கழுவியது. யூதபரம்பரைப்படி விருந்தாளி ஒருவன் வீட்டுக்குவந்தால் அவன் பாதங்களுக்குத் தண்ணீர் ஊற்றி வரவேற்க வேண்டும். இயேசு விருந்தாகவும், விருந்து கொடுப்போனாகவும் அமைந்ததால் இச் செயலை அவரே செய்தார். இராயப்பர் போன்ற சிலருக்கு இது ஒரு அதிர்ச்சியைக் கொடுத்தது. என்றாலும் இயேசு தன் பணியைச் செய்தார். தான் செய்ததுபோல் சீடரும் செய்யவேண்டுமென இயேசு அவர்களைப் பணித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்து இடம் பெற்றது. புளியாத அப்பத் திருவிழா அது. யூதரின் அப்புளித விழாவுக்கு ஒரு புதிய பொருள் கொடுத்தார் இயேசு. அவரே தம் சீடரின் உணவாகிவிட்டார் 'இது என் சரீரம்' என்று அப்பத்தையும் 'இது என் இரத்தம்' என்று இரசத்தையும் எடுத்து அவர்களுக்கு உண்ணவும் குடிக்கவும் கொடுத்தார். அப்பமும் இரசமும் இயேசுவாக மாறிய இப்பரிய நிகழ்ச்சி ஊனக் கண்களுக்கு ஒரு முட்டாள்தனம்; உள்ளக் கண்களுக்கோ அது ஓர் உண்மை. பாஸ்கா விழாவிலே அடிக்கப்பட்டு உண்ணப்பட்டதே ஒரு ஆட்டுக் குட்டி. அதன் இடத்திலேதான் இன்று இயேசு இயேசு ஒரு செம்மறி எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேற ஒரு செம்மறியின் இறைச்சியும் இரத்தமும் அன்றைய மக்களுக்கு ஒரு விடுதலைப் பயண உணவாக அமைந்ததுபோல் உலகின் பாவ விடுதலைப் பயண உணவா கக் கிறிஸ்து என்ற செம்மறியே அதாவது அவரது உடலும் இரத்த முமே இன்று இயேசுவால் கொடுக்கப்பட்டது. விருந்து முடிந்ததும் இறுதியுரை யேசுவால் கொடுக்கப்பட்டது சீடருக்கு அவர் தம் உரையில் நம்பிக்கையூட்டினார். விருந்து முடிந்ததும் எல்லோரும் வெளியேறினார்கள்.

இயேசுவின் சாவுக்கு நேரம் நெருங்கிவர அவர் அதிகம் செபத்தில் ஈடுபடவேண்டியிருந்தது. ஒரு தோட்டத்திலுள் சென்று அவர் செபித்தார். உருக்கமாகச் செபித்தார். உணர்ச்சிவசப்பட்டுச் செபித்தார். வியர்வையே இரத்தமாகும் அளவுக்கு அவரது உடலிலே தாகம் ஏற்பட்டது.

இதுவரை காலமும் யாரும் அவரைப் பிடிக்க விடவில்லை அவரை எந்தவிதத்திலும் மடக்க விடவில்லை. இப்பொழுதோ தாமாகவே தம்மை மரணத்துக்குள்ளாக்கும்படி விட்டுவிட்டார். இதுவரை எந்த ஒரு குற்றச்சாட்டுக்கும் அவர் தம்மை விட்டுக் கொடுத்தவரல்ல, இப்பொழுதோ எல்லாவித குற்றச்சாட்டுக்கும் அவர் காட்டியது மௌனம். 'நீ இறைவனின் மகனோ?' என்ற வினாவுக்கு மட்டுமே ஆம் என்று விடையளித்தார். இது உண்மை தானே. தானே உண்மை என்பதையும் அவர் வெளிப்படுத்தினார். இதனாலேதான் இவருக்கு ஒரு சிலுவை தயாராயிற்று. ஏற்றுக்கொண்டார். இறுதிப் பயணம் இடம் பெறலாயிற்று. துன்பங்கள் நிறைந்த சிலுவைப்பாதையாய் அது அமைந்தது. நாற்பது ஆண்டுகள் விடுதலைப் பயணத்தில் இஸ்ராயேல் மக்கள் நடந்தார்களே அதேபோன்று தான் உலகின் பாவ விடுதலைக்கு உலக மக்கள் சார்பாக அவர் நடந்தார். பல தடவைகளில் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்தார். வேதனைப்பட்டாலும் எழுந்தார். பலருடைய அனுதாபங்கள் அவருக்குக் கிடைத்தன. இருந்தாலும் யூத மறைக் குருக்களின் வெறுப்புக்கு அவர் உள்ளானார்.

கல்வாரி மலையிலே அவருக்குக் கடைசி நேரம் எதுவுமே அவரிடம் இருக்கவில்லை. உடுத்திய உடுப்பு மட்டுமே. அதையும் பறித்தார்கள். இன்னும் ஒன்றுமட்டுமே இருந்தது. அது அவர் உயிர். சிலுவையில் தொங்கும் போதும் அதையும் கேட்டார்கள். அவருமோ கொடுத்தார். ''நான் சாகவேண்டும் நீங்களோ வாழவேண்டும்'' இதுவே அவரது இறுதிப் பயணவிருந்தில் அவர் காட்டிய செயற்பாடு. அந்த விருது வாக்குக்கமைய உலகின் மக்கள் வாழ அவர் மாண்டார்.

எல்லாம் முடிந்தது என்று எல்லோரும் எண்ணினார்கள். ஏன் எம்மாவுக்குச் சென்ற சீடர்கள் கூட அப்படியேதான் எண்ணினார்கள். இல்லை அவர் உயிர்த்துவிட்டார். உயிரோடு இருக்கின்றார். தம் சீடர்களுக்கும் தாய்க்கும் அவர் தம்மைக் காண்பித்தார். விசுவசித்தவர்கள் எல்லோரும் அவரைக் கண்டார்கள் கேட்டார்கள். அவரோடு பேசினார்கள். அவர் வாழ்கின்றார், என்றுமே வாழ்வார்.

இறைமக்களின் பாஸ்கா

இஸ்ராயேல் மக்களின் வரலாற்றில், என்றும் மறக்கமுடியாத நிகழ்ச்சியாகவும், அதிமுக்கியத்தும் வாய்ந்த செயற்பாடாகவும் அமைந்தது இறைவன் அவர்களை எகிப்திலிருந்து கானான் தேசத்துக்குக் கடத்தி வந்த நிகழ்ச்சியாகும். இந்த நெடுந்தூரப் பயணம் நாற்பது ஆண்டுகள் எடுத்தன. மோயீசன் சீனாய் மலையில் இறைவனின் திருச்சட்டங்களைப் பெறுவதற்கு அப்புனித மலையிலே நாற்பது நாட்கள் செலவிடவேண்டியிருந்தது. கானான் தேசத்தைப் போய்ச் சேருவதற்கு முன் மோயீசன் அங்கு அனுப்பிய ஒற்றர்கள் அங்கு சுற்றித்திரிந்த நாட்களும் நாற்பது என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இறைவாக்கினர் எலியாஸ் ஓரேப் என்ற கடவுளின் மலையை வந்தடைய நாற்பது நாட்கள் பயணம் செய்து இறுதியில் இறைவனின் தரிசனத்தையும் பெற்றார். நமது ஆண்டவர் இயேசுவும் நாற்பது நாட்கள் வனந்தரத்தில் தவமிருந்தபின்தான் இறையரசை அறிவிக்கும் பணியில் ஈடுபட்டு முடிவாகக் கல்வாரியில் இறந்து உயிர்த்தார். இந்த நாற்பதுநாள் பின்னணியில்தான் இறைமக்கள் பாஸ்காவைத் தவக்காலத் தயாரிப்புடன் கொண்டாடுகிறார்கள்.

இறைமக்களின் திருவழிபாடு ஒரு ஆண்டுச் சக்கரமாக அமைந்துள்ளது. திருவழிபாட்டின் ஆண்டுச் சக்கரத்தில் உச்சகட்ட நிகழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக அமைவது பாஸ்காவிழா. இவ்விழாவை அகற்றிவிட்டால் இறை மக்களின் வழிபாடு நிலைகுலைந்து விடும். திருவழிபாட்டின் உயிர் நாடியான பாஸ்கா, திருப்பயண நினைவுக் கொண்டாட்டங்களாக ஞாயிறு தினங்களில் வாரந்தோறும் நடைபெற்றுவருகின்றது. ஆண்டுக்கு ஒரு முறை இந்நிகழ்ச்சி மேலும் சிறப்புப் பெறுகின்றது. நாற்பது நாட்கள் ஆயத்தங்களுடன் இந்தப் பாஸ்காவிழா கொண்டாடப்படும் போது பழைய உடன்படிக்கையின் நாற்பது நாட்களெல்லாம் நினைவுக்கு வந்துகொண்டேயிருக்கும். தவக்கால நாற்பது நாள் தயாரிப்பு நம்மை குருத்து ஞாயிறு தினத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது. புனித வாரம் (பரிசுத்தவாரம்) தவக்காலத்தின் ஓர் அங்கமல்ல தவக்காலம் புனித வார நிகழ்ச்சிகளுக்கு ஓர் ஆயத்தகாலம். தவக்காலத்தின் விளைவே புனித வார நிகழ்ச்சிகளாகும்.

புனித வாரத்தின் முதல் நிகழ்ச்சி குருத்தோலைத்தினக் கொண்டாட்டமாக அமைகின்றது. இந்த நாள் கிறீஸ்து அரசர் தினமாகும். குருத்தோலைப்பவனி முதலில் இடம்பெறும்பொழுது, இயேசு ஜெருசலேம் நகருக்குள் மீட்பின் மன்னராக நுழைந்த செயல் நினைவுபடுத்தப் படுகின்றது. திருப்பலியில் திருப்பாடுகளின் வரலாறு நற்செய்தியாக அறிவிக்கப்பட்டு, இறைமக்கள் புனித வாரத்தின் சிறப்பால் அணி செய்து அனுப்பப்படுகின்றனர். ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகளைக் கொண்டு "ஆண்டவர் பெயரால் வருகின்ற மீட்பின் மன்னன் வாழ்க!" என்று ஆரவாரம் செய்த மக்கள், குருத்தோலைகளைத் தங்கள் வீடுகளுக்குத் தங்கள் மன்னனின் சின்னமாக எடுத்துச் செல்கின்றார்கள்.

புனித வாரத்தின் அடுத்துவரும் சிறப்பு நிகழ்ச்சி திருத்தைலத்தின் திருப்பலியாகும். இந்த நிகழ்ச்சி பாரம்பரியத்தின்படி பெரிய வியாழன் காலையில் ஆயர் தலைமையில் மட்டும் இடம் பெற்று வந்துள்ளது. மறைவட்டத்தின் குருக்களும் பொது நிலையினரும் இவ்வழிபாட்டிற்கு ஒன்று சேருவார்கள். வசதிக்குறைவுகள் ஏற்படும்போது புனித வாரத்தின் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் ஒரு நாளில் ஆயர் தம் குருக்களோடு திருப்பலி நிறைவேற்றுவார். அருட்சாதனங்களுக்குப் பயன்படுத்தும் திரு எண்ணெய் இத் திருப்பலியில் ஆசீர்வதிக்கப்படுவது, மீட்பின் செயலான இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பிலிருந்து அருட்சாதனங்கள் புறப்படுவதை எடுத்துக் காட்டுகின்றது.

பாஸ்காவிழாவின் உச்சகட்ட வழிபாடு பெரிய வியாழன் இரவோடு ஆரம்பமாகி பெரியசனி இரவோடு முடிவடைகின்றது. பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழன், பெரியவெள்ளி, பெரிய சனி வழிபாடு மூன்று வழிபாடுகள் இல்லை. நற்கருணையை ஏற்படுத்துவதும், இயேசுவின் பாடுகள் மரணமும், அவரது உயிர்ப்பும் மூன்று நாட்களில் நடைபெற்றாலும் அது ஒரே வழிபாடுதான். பெரிய வியாழன் வழிபாட்டுக்கு முடிவில்லை. பெரிய வெள்ளி வழிபாட்டுக்குத் தொடக்கமில்லை. பெரிய வியாழன் வழிபாட்டின் முடிவில் இறைமக்கள் அனுப்பப்படுவதுமில்லை. பெரிய வெள்ளி வழிபாட்டில் பிதா சுதன் பரி. ஆவி... என்று ஆரம்பிப்பது மில்லை. அவ்வாறுதான், பெரிய வெள்ளி வழிபாட்டின் முடிவில் சென்று வாருங்கள் என்று கூறுவதுமில்லை. பெரிய சனி இரவில் பிதா சுதன் பரி. ஆவி..., என்று ஆரம்பிப்பதுமில்லை. பெரியவியாழன் இரவு தொடங்குகின்ற வழிபாடு பெரிய சனி இரவு நடைபெறும் வழிபாட்டுடனே முடிவடைகின்றது.

★

“ விசுவாசிகளின் வாழ்வில் ஏறக்குறைய ஒவ்வொரு நிகழ்ச்சியும் கிறிஸ்துவின் பாடு, சாவு, உயிர்ப்பு என்னும் மறைபொருள் நிகழ்ச்சியிலிருந்து வழியும் இறையருளால் புனிதமடைகிறது”.

இறை பணி எண் 61

★

“ மாபெரும் அன்பின் மறைபொருளாகிய உலக மீட்பில் படைப்பு அனைத்தும் புதிய நன்மைபெறுகிறது ”.

இன்றைய உலகில் திருச்சபை எண் 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் உயிர்ப்பும்
# கிறீஸ்தவ சாட்சியமும்

அருள் சகோதரன் T. A. தவராஜசிங்கம்
(இறையியல் 4-ம் ஆண்டு)

முன்னுரை :

**நாம்** சாதாரண நிலையில் இருந்து சிந்திக்கின்றபொழுது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக உலகிலே வாழ்ந்த ஒருவர், அதிலும் மிகவும் கீழ்த்தரமான சிலுவையில் மரணமடைந்த ஒருவர், இன்றும் உலகின் பல பாகங்களிலும் வாழுகின்ற பல்லாயிரக் கணக்கான மக்கள் மனதிலே தனக்கென ஒரு தனி இடம்பிடித்துள்ளா ரென்றால், இன்று கூடப் பலர் அவரது பணிவாழ்வைத் தொடர தம் வாழ்வை அர்ப்பணிக்க ஆயத்தமாகவுள்ளார்களென்றால், அதற்கு என்ன காரணம்? கிறீஸ்துவின் உயிர்ப்பின் உறுதிப்பாடும் அதற்குச் சான்றுபகர்ந்தவர்களது வாழ்க்கைமுறையுமே அடிப்படைக் காரணங் களாக அமைகின்றன. ஆயினும் இன்று பலரது உள்ளங்களிலே கிறீஸ்து உண்மையாகவே உயிர்த்தெழுந்தாரா? அவரது உயிர்ப்பின் சான்று கள் உண்மைதானா? போன்ற கேள்விகள் எழத்தான் செய்கின்றன. இவற் றுக்குச் சரியான விடை எட்டாமையாலே ஒரு வெதுவெதுப்பான விசு வாசவாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். ஆகவே வேதாகமத்தின் அடிப்படையிலே உயிர்ப்பின் நிகழ்வுகளை ஆய்ந்து உண்மையினை அறிய வும் அதில் தெளியவும் முயல்வோம்.

**கிறீஸ்து உண்மையாகவே உயிர்த்தாரா?**

கிறீஸ்து உலகிலே வாழ்ந்தபோது, ஒரு எதிர்க்கப்படும் அறிகுறி யாக இருந்து அவரது சொந்த மக்களாலேயே சிலுவைச் சாவுக்கு உட்பட்டு கல்லறையில் அடக்கப்பட்டார் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற உண்மை. ஆனால் அவரது உயிர்ப்பையும் அவரது உயுர்ப்பின் சாட்சிகளையும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ள வில்லை. கிறீஸ்துவின் உயிர்ப்பையும் அதன் சாட்சிகளையும் எதிர்ப்ப வர்கள் யார்? அவர்கள் முன்வைக்கும் காரணங்கள் எவை? என்ப வற்றை ஆராய்ந்தால் உண்மையைத் துலக்க உதவியாகவிருக்கும். முதலில் கிறீஸ்துவின் உயிர்ப்பையும் அதன் சாட்சிகளையும் எதிர்த்த வர்கள் யூத குருக்கள். பின்னர் இவர்கள் கொண்டிருந்த கருத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றிய றெய்மாரும் (Reimar) அவரது தோழர்களும் எதிர்த் தார்கள். கிறிஸ்துமரித்தவுடன் அவரது சீடர்களுக்கு வீரம் வந்துவிட்டது. நிக்கதேமுஸ் அரிமத்தியா சூசை இருவருடன் சேர்ந்து அப்போஸ்தலர் கள் இரவில் இயேசுவின் உடலைத் திருடி மறைத்துவைத்து விட்டு மரணத் திலிருந்து கிறீஸ்து உயிர்த்து விட்டார் என்ற புரளியைக் கிளப்பிவிட்டார் கள். இது எந்தளவுக்கு உண்மையாகலாம் என்பதை அறிய : யூத குருக்கள் யார்? அவர்கள் ஏன் கிறீஸ்துவின் உயிர்ப்பின் உண்மையை மறைக்க முயலவேண்டும் என்பதை ஆராய்ந்தல் உதவியாயிருக்கும்.

யூத குருக்கள் கிறீஸ்துவைவிட சட்டத்தையே ஏற்றுக்கொண்டு வாழ்ந்தவர்கள். அதிலும் மேலாக அவர்களே கிறீஸ்வின் கொலைக்குக் காரணமாக அமைந்தவர்கள். எனவே அவர்கள் கிறீஸ்துவின் உயிர்ப்பை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்கள் தமது குற்றத்தை ஏற்றுக் கொள்வதையோ அல்லது தமது குருத்துவ பதவியைத் துறப்பதையோ விட கிறீஸ்துவின் உயிர்ப்பை எதிர்ப்பதையே சுலபமான வழியாகக் கருதினார்கள். அதனால்தான் உயிர்ப்பின் காட்சியைக் கண்ட காவலாளிக் குப் பணம் கொடுத்து பொய்ச்சாட்சி சொல்லவைத்தார்கள். அப் போஸ்தலர்கள் இயேசுவின் உடலைத் திருடிச் செல்ல ஏன் காவலாளிகள் அனுமதித்தார்கள்? அவர்கள் உறக்கத்தில் இருந்தபோது அவரது உடல் திருடப்பட்டிருந்தால் அப்போஸ்தலர்கள் திருடியதைப் பார்க்க அவர்களுக்கு எப்படிக் கண் தெரிந்திருக்கும்? இவற்றைவிட அப்போஸ் தலர்பக்கம் நின்று சிந்திக்கும்போது அவர்கள் ஏன் இரண்டு நாட்கள் தாம தித்து உடலைத் திருடவேண்டும்? யேசு கைதுசெய்யப்பட்டதும் ஓடி ஒளிந் தவர்களுக்கும் வேலைக்காரிக்குப் பயந்து தம்குருவை மறுதலித்த இராயப் பருக்கும் இரவோடு இரவாக உடலைக் கடத்தும் அளவுக்கு எங்கிருந்து துணிவுவந்தது? ஒருவேளை பரிசுத்த ஆவியிடமிருந்து வந்ததுஎன்று சொல் வார்களோ? கிறீஸ்துவின் உயிர்ப்பு உண்மையில்லை என்று சொல்பவர் களுக்கு கிறீஸ்து அனுப்புவதாகச் சொன்ன துணையாளரான பரிசுத்த ஆவியில் மட்டும் அபார நம்பிக்கையோ? நாம் இன்னும் சற்று ஆழ மாகச் சிந்திக்கின்றபோது யாராவது தமக்குப் பொய்யெனப்படும் ஒரு செயலுக்குத் தமது உயிரைக் கொடுக்க முன்வருவார்களா? அப் போஸ்தலரைத்தான் குறிப்பிடுகின்றேன். அவர்கள் யேசுவின் உடலைக கடத்தியிருந்தால் அவர் உயிர்த்தார் அதற்கு நாங்கள் சாட்சிகள் என்று சொல்லி எவ்வாறு அவர்கள் தமது உயிரைக் கொடுத்திருக்க முடியும்?

கிறீஸ்துவின் உயிர்ப்புக்கு அழியாத சாட்சியங்களாக வேதாக மத்திலே காணக்கிடப்பவை அவரது திருக்காட்சிகளே. ஆனாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெனன் ( *Renan* ), *A.* மேயர் ( *Meyer* ) போன்றோரின் கொள்கைப்படி கிறிஸ்துவின் சீடர்கள், முக்கியமாகக் கிறிஸ்துவைப் பின்பற்றிய பெண்கள் கிறிஸ்துவின் வேதனைகளையும் மரணத்தையும் கண்டபின் மிக உணர்ச்சிவசப்பட்டு திடுக்கிட்ட ஒரு நிலையில் இருந்தார்கள். தாம் உயிர்ப்பதாகக் கிறிஸ்து அடிக்கடி கூறியதையும் இந்நிலையில் நினைவுக்குக் கொண்டுவந்தார்கள். ஆதலால் தங்கள் உள்ளத்திலே இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்துவிட்டார் என்று நிச்சயித்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் கிறிஸ்துவைக் காட்சியில் காண்பதாக நம்பிக்கை கொண்டார்கள் என்று கூறினார்கள். இந்தக் கொள்கை எந்த அளவுக்கு சாத்தியமாகக்கூடியது?

இக்கொள்கை சாத்தியமாகக்கூடிய நிலையை நவீன உளவியலாளர்கள் கருத்தின் அடிப்படையில் வைத்து சாதகமாகச் சிந்தித்தாலும், பெண்கள் ஒரு மனோநிலையில் அதிகமாக அவர்கள் விரும்பிய கருத்தினால் அழுத்தப்படும்போது அதனாலேயே ஆட்கொள்ளப்படக் கூடிய குழப்பமான ஒரு நிலை உருவாக இடமுண்டு எனச் சிலர் கூறுவர். அதை அவர்கள் (*Histeria*) ஹிஸ்டீரியா என்ற வியாதியாகக் கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த அசாதாரண சாதக நிலமை ஒன்றை வைத்துக்கொண்டு ஒரே சந்தர்ப்பத்தில் இவ்வியாதி பல பெண்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதை எந்தவகையிலும் நியாயப்படுத்தமுடியாது. அதேவேளையிலே அப்போஸ்தலர்கள் எல்லோரையுமே இவ்வியாதி பீடித்திருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதிலும் நியாயமில்லை. அப்போஸ்தலர்களுக்கு உயிர்த்த கிறிஸ்துவின் செய்தி பெண்களின் வாய்மொழியாக வருவதற்கு முன்னதாகவே நேரடியாக அது கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்டது என்பதற்கு மிகத் தொன்மை வாய்ந்த போதனையாகிய "கெரிக்மா" (*Kerygma*) வில் இருந்து நிரூபணமாகிறது (கொரி 15:3-7).

உயிர்த்த கிறிஸ்துவின் உண்மைக் காட்சிகளுக்கு நற்செய்தியாளர்கள் சில ஆதாரபூர்வ நிரூபணங்களைத் தரவிளைகிறார்கள். லூக்காசும், அருளப்பரும் உயிர்த்த கிறிஸ்து தமது காயங்களை அப்போஸ்தலர்களுக்குக் காட்டியதாகக் கூறுகிறார்கள் (லூக் 24:39, அரு 20:20,25). இன்னும் மரியமதலேன் அவரது குரலைப் புரிந்துகொண்டாள் (அரு 20:16) எம்மாவுஸ் சீடர்கள், அவர் அப்பத்தைப் பிட்கையில் அவரை உணர்ந்து கொண்டனர் (லூக் 24:30). கிறிஸ்துவின் உயிர்ப்பின் நற்செய்தியைத் தெரிவிக்கும் வானதூதர் பெண்களிடம்; "சிலுவையில் அறையப்பட்ட நசரேத்தூர் யேசுவையா தேடுகிறீர்கள்?" என்று கேட்டு "அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த்துவிட்டார்'' என்று அறிவிக்கின்றனர் (மாற் 16:6). மத்தேயு உயிர்த்த இயேசுவை எல்லா நற்செய்திகளுக்கும் கொடுமுடிய கதமது நற்செய்தியின் இறுதியில் வைக்கின்றார். இந்நிகழ்ச்சியைச் சித்தரிக்கையில் அது இடம்பெற்ற கலிலேயா, மற்றும் அவர் தமது சீடர்களுக்குக் காட்சிகொடுத்தது போன்ற விபரங்களையும் தருகின்றார் (மத் 28:16-20). இவைபோன்ற இன்னும் பல சான்றுகள் கிறீஸ்துவின் உண்மை உயிர்ப்பை உறுதிசெய்கின்றன.

### கிறீஸ்துவின் உயிர்ப்பே கிறீஸ்துவை உண்மைப்படுத்தியது

கிறீஸ்து உலகிலே வாழ்ந்தபோது அவரை உறுதியாக எவருமே ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அவரது போதனையைக் கேட்டும், புதுமைகளைக்கண்டும் வியந்த மக்கள் பலர் அவரைப் பின்தொடரத் தொடங்கினர் ஆனாலும் அவர்கள் அதிலே உறுதிகொள்ளவில்லை. அதனால்தான் 'ஓசான்னா' பாடிய மக்கள் கூட்டம் 'ஒழிக, ஒழிக சிலுவையால் அறையும்' என்று கூச்சலிட்டது. அவரின் போதனைகளைக் கேட்டும், சாதனைகளைக்கண்டும் நேரடி அனுபவம் பெற்று அவரோடு வாழ அழைக்கப்பட்ட சீடர்கள் கூட அவரிலே உறுதிகொள்ளவில்லை. இதனால்தான் அவர்கள் ஆழ்கடலிலே தாம் மூழ்கப்போவதாகப் பயந்து 'ஆண்டவரே நாங்கள் மடிந்துபோகிறோம் உமக்கு அக்கறையில்லையா?' என்று அபயக்குரல் எழுப்பினார்கள். இன்னும் யூதாசின் காட்டிக்கொடுத்தல், இராயப்பரின் மறுதலிப்பு, ஏனையோரின் தப்பியோட்டம் அவர்களது அங்கலாய்ப்பு நிலமையையே எடுத்துக்காட்டுகின்றன. இன்னும் சற்று ஆழமாகச் சிந்திக்கும்போது அவரது தாயானவளே அவரை முழுமையாக விளங்கிக் கொள்ளவில்லை. அதனால்தான் அவள் ஆலயத்திலே 'என்மகனே எங்களுக்கு இப்படிச் செய்துவிட்டாய்?' என்று கேட்டாள். இன்னும் ஒரு சந்தர்ப்பத்திலே கிறீஸ்துவின் பகிரங்கபணிவாழ்வின் போது அவரை எல்லோரும் வெறுத்து ஒதுக்கி மலையின் உச்சியிலிருந்து தள்ளிவிட எத்தனித்த பின்னர் அவரது தாயானவள் வந்து அவரை வீட்டுக்குவருமாறு கேட்பதையும் நற்செய்தி கூறுகின்றது. ஆகவே தேவதாயினால் கூட அவரை முழுமையாக விளங்கிக்கொள்ள முடியவில்லை, அவளுக்குத் தூதுரைத்த தூதுவனுடைய செய்தி முழுமையாக அவளுக்கு விளங்கவில்லை அதனால்தான் அவள் அந்நிகழ்ச்சிகளை மனதிலே வைத்துச் சிந்தித்துவர நேர்ந்தது ஆகவே ஒட்டுமொத்தத்தில் கிறிஸ்து வாழ்ந்தபோது அவரது வாழ்வை, வார்த்தைகளை முழுமையாக விளங்கிக்கொண்டவர் எவரும் இருக்கவில்லை. கிறீஸ்துவின் உயிர்ப்பின் பின்னரே அவரது வாழ்வும் வார்த்தையும் தெளிவு பெற்றவையாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீஸ்து பிடிபட்டதும் பயந்து ஓடி ஒளித்த அப்போஸ்தலர்கள் அவர் உயிர்த்த செய்தி கேட்டதும் துணிவோடு கல்லறைக்கு ஓடுகிறார்கள். அந்நிகழ்ச்சியை அருளப்பர் விபரிக்கையில் தான் இராயப்பருக்கு முன்னதாக ஓடிக்கல்லறையை அடைந்ததாகவும் பெருமை பாராட்டிக்கொள்கின்றார். கிறீஸ்து சொன்னபடியே உயிர்த்தெழுந்ததனால் வந்த உறுதிப்பாட்டினால் உந்தப்பட்டு வந்ததே அந்த வேகம். அவரது உயிர்ப்பே அப்போஸ்தலர்களுக்கு அவரது வார்த்தையிலும் வாழ்க்கையிலும் உறுதி ஊட்டியது. அவரை நேரில் கண்டகாட்சிகள் அதற்கு மேலும் உரமூட்டியது "உயிர்த்த கிறீஸ்துவின் காட்சிகளைக்கண்ட அத்தனைபேரும் புனித சின்னப்பர் உட்பட" (1 கொரி. 1 : 8-1; 9; கலா 1:15f) ஐயமின்றிக் கூறும் உண்மை யாதெனின் உயிர்த்த யேசுவின் சாட்சிகள் அப்போஸ்தலர்கள் யேசுவில் உண்மையான முழுவிசுவாசம் வைக்கப் புத்துயிர் ஊட்டியது என்பதாகும்.

**கிறீஸ்துவின் உயிர்ப்புக்குச் சான்றுபகர்தலே கிறிஸ்தவ மதமாகியது**

கிறீஸ்துவின் உயிர்ப்பைக் கண்டுணர்ந்தவர்களது சாட்சியங்களாலேயே கிறீஸ்தவம் உருவாகியது. குறிப்பாக அப்போஸ்தலர்களது ஆர்வமிக்க போதனைகளாலும் சாதனையான சாட்சியங்களாலும் பலரும் கவரப்பட்டார்கள். 'கிறீஸ்து உண்மையாகவே உயிர்த்தெழுந்தார். அதற்கு நாங்கள் சாட்சிகள்.' 'நாங்கள் பார்த்ததையும், கேட்டதையும் கண்டுணர்ந்ததையும் எங்களால் பேசாதிருக்க முடியாது' என்று கூறி உறுதியான சான்று பகர்ந்தார்கள். யூதசங்கத்தார் அவர்களைப் பிடித்து சாட்டைகளால் அடித்து 'இனி இயேசுவின் பெயரைச்சொல்லி போதிக்கலாகாது' என்று எச்சரித்தபோதும் அவர்கள் முன்னிலையிலேயே 'நீங்கள் சிலுவையில் அறைந்து கொண்ட அதே கிறீஸ்துவைக் கடவுள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழச்செய்தருளினார் என்று துணிவுடன் கூறினார்கள். அவர்களின் துணிவுமிக்க உறுதியான போதனையாலே கவரப்பட்டு முதலாவது போதனையைக் கேட்க ஐயாயிரத்துக்கும் அதிக மானவர்கள் மனம் மாறினார்கள் என்று அறிகின்றோம். அவர்களும் கிறிஸ்துவின் உயிர்ப்புக்குச் சாட்சிகளாக மாறினார்கள். அந்த ஆதிக் கிறீஸ்தவர்களின் எடுத்துக்காட்டான வாழ்க்கை முறையே சிறந்த சாட்சியமாக அமைந்தது. எனவே எமது வாழ்விலும் நாமும் எமது எடுத்துக்காட்டான வாழ்வினால் கிறீஸ்தவத்துக்கும் கிறீஸ்துவின் உயிர்ப்புக்கும் சான்றுபகரவே கிறீஸ்தவர்களாக அழைக்கப்பட்டிருக்கின்றோம். இதுவே எமது பொதுமைப்பாடுடைய அப்போஸ்தலத்துவம் என்று இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு எடுத்துரைக்கின்றது. எனவே எமது வாழ்விலே நாங்கள் கிறீஸ்தவர்கள் என்று சொன்னால் கிறீஸ்துவின் சாட்சிகளாக வாழவேண்டும் என்பதேயாகும். நாங்கள் கிறீஸ்துவின் சாட்சிகளாக மாறாவிடின் எமது கிறீஸ்தவம் வீணானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீஸ்துவின் உயிர்ப்பிலே நம்பிக்கை கொண்டவர்களை அழித்து ஒழிப்பதிலேயே ஆர்வம் காட்டிய சவுல் ( பவுல் அல்லது சின்னப்பர் ) தமது வாழ்விலே உயிர்த்த கிறிஸ்துவை சந்தித்தபோது அவரினால் முழுமையாக ஆட்கொள்ளப்பட்டவராக கிறீஸ்துவின் சிறந்த சாட்சியாக விளங்குவதை அவரது வாழ்வு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. அவர் தமது கடிதங்களினூடாக தமது அனுபவத்திலிருந்து எமக்குத் தருகின்ற கருத்துக்களைக் கவனிப்போம்.

* 'நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானதுமாக உங்களுக்கு கையளிப்பதெதுவெனில் மறைநூலில் உள்ளபடி கிறீஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார். அடக்கம் செய்யப்பட்டு மறைநூலில் உள்ளபடியே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்'. ( 1 கொரி. 15 : 3—5 ).
* ''கடைசியாக காலந்தப்பிய பிறவிபோன்ற எனக்கும்தோன்றினார்'' ( 1 கொரி. 15 : 8 )
* ''கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே. உங்கள் விசுவாசமும் பொருளற்றதே''. ( 1 கொரி. 15 : 14 )
* ''ஒரே மனிதனால் பாவமும், பாவத்தால் சாவும் இந்த உலகத்தில் நுழைந்ததுபோல, ஒரே மனிதனின் உயிர்ப்பால் எல்லா மனிதருக்கும் பாவமன்னிப்பும், உயிர்ப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது''' ( உரோ. 5 12 .
* ''உள்ளபடி கிறீஸ்து இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். துஞ்சியோரின் முதற்கனி அவரே'' ( 1 கொரி. 15 : 20 ).
* ''இறந்தோரிடமிருந்து கிறீஸ்துவை உயிர்ப்பித்தவர் உங்களுக்குள் குடிகொண்டுள்ள தமது ஆவியாலேயே சாவுக்குரிய உங்கள் உடல்களை உயிர்பெறச் செய்வார்'' ( உரோ. 8 : 11 ).

இவ்வாறான உயிர்ப்பின் சாட்சியங்களாலேயே கிறீஸ்தவம் வளர்ந்து வந்தது. ஆகவே கிறீஸ்தவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சாட்சிகளாகவிருந்து கிறீஸ்துவோடு வாழ வேண்டும்.

முடிவுரை

'கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் எமது விசுவாசம் வீணானது' என்று புனித சின்னப்பர் உறுதியாகச் சொல்லுகையில், 'உயிர்த்த கிறீஸ்துவுக்குச் சான்றுபகர்கின்ற வாழ்வு வாழாத கிறீஸ்தவனது கிறீஸ்தவமும் வீணானதே' என்று சொல்லலாமன்றோ. எனவே ஒவ்வொரு கிறீஸ்தவனும் கிறீஸ்துவின் உயிர்ப்பிலே உறுதிகொள்ளவும், அந்த உயிர்த்த கிறீஸ்துவுக்குத் தனது வாழ்விலே தான் வாழ்கின்ற சமூக சூழ்நிலையிலே தேவைக்கு ஏற்றபடி கிறிஸ்துவின் சாட்சியாக வாழவே அழைக்கப்படுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த கிறிஸ்துவின் கொடை — சமாதானம்

திரு. இ. சா. பங்கிராஸ்
மறை ஆசிரியர்

"வாரத்தின் முதல் நாளாகிய அன்று மாலை சீடர்கள் தாங்கள் கூடியிருந்த இடத்திலே யூதருக்கு அஞ்சிக் கதவுகளை மூடிவைத்திருக்கையிலே இயேசு வந்து அவர்களிடையே நின்று "உங்களுக்குச் சமாதானம்" என்றார். இவ்வாறு சொல்லி அவர்களுக்குத் தம் கைகளையும் விலாவையும் காண்பித்தார். ஆண்டவரைக் கண்டு சீடர்கள் மகிழ்வுற்றார்கள். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி "உங்களுக்குச் சமாதானம், என் தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார் (அரு. 20 : 19–21).

இயேசுவைத் தங்கள் தலைவராகவும், ஆண்டவராகவும், மெசியாவாகவும் ஏற்று அவரைப்பின்பற்றி வாழ்ந்தவர்கள் அவர் சீடர்கள். இச்சீடர்கள் தம் வாழ்விலே பல்வேறு எதிர்பார்ப்புகளோடும், ஆசைகளோடும் இயேசுவைப் பின்பற்றினார்கள். அவரின் போதனைகளாலும், அற்புதங்களாலும் வியப்பும் பெருமகிழ்வும் கொண்டிருந்தார்கள். இயேசுவை விட மேலானது வேறு எதுவுமில்லை என்றுணர்ந்து தமக்குள்ள அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின் சென்றார்கள். இத்தகைய உயர்ந்த எண்ணங்களோடு வாழ்ந்தவர்களுக்கு இயேசுவின் சிலுவை மரணம் பெரியதோர் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புகளையெல்லாம் நிலைகுலையச் செய்தன. அது மட்டுமல்ல இயேசுவைக் கொன்றவர்கள் தங்களையும் கொல்லக் கூடும் என்ற அச்சத்தைக் கொடுத்தது. இவ்வாறு பயந்த சீடர்கள் இயேசுவுடன் இறுதி இராவுணவு உண்ட அறையில் கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளேயிருந்தார்கள். சோகமேயுருவாக இருந்த சீடர்கள் மத்தியில் உயிர்த்த இயேசு கதவு பூட்டப்பட்டிருந்த நிலையிலேயே உள்ளே நுழைந்து "உங்களுக்குச் சமாதானம்" என்று அவர்களை வாழ்த்தினார். ஆண்டவரைக் கண்டு சீடர்கள் வியப்புற்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமாதானம் என்பதன் பொருள்

யூதர்கள் ஒருவர் ஒருவரைச் சந்திக்கும் பொழுது "ஷலோம்" (*Shalom*) அதாவது "உமக்குச் சமாதானம்" என்று வாழ்த்திக் கொள்வார்கள். இதன் பொருள் 'எவ்வித பிரச்சனைகளிலிருந்தும் நீர் காப்பாற்றப்படுவீராக' என்பதாகும். இங்கு இயேசு தம் சீடரை இவ்வாறு வாழ்த்தியபோது அதற்கு தனிக்கருத்து இருந்தது. இவ்வாழ்த்து பயந்து ஒளிந்திருந்த இயேசுவின் சீடர்களுக்கு தைரியத்தை அளித்தது. அவர்களின் விசுவாசமும் எதிர்பார்ப்புகளும் வீணாகவில்லை என்ற நம்பிக்கையைக் கொடுத்தது. இயேசுவின் பணியை அவர்கள் தொடர்ந்து ஆற்றுவதற்குத் தேவையான அருளையும், ஆற்றலையும் அளித்தது மரணத்தை வென்று உயிர்த்த இயேசு நம்மோடு வாழ்கின்றார் என்ற அனுபவத்தைப் படிப்படியாக அவர்களில் வளர்த்தது. சீடர்கள் தம் வாழ்விலே எத்தகைய துன்ப வேதனைகளையும் தாங்கிக் கொள்ளவும் தியாகங்கள் பல புரியவும், இவ் வாழ்த்தும், இயேசுவின் உயிர்ப்பும் பெரும் உந்து சக்தியாக இருந்தன. "உங்களுக்குச் சமாதானம்" என்ற வாழ்த்துதல் சீடர்களை இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சிகளாக சான்று பகர வைத்தது.

### சமாதானம் சாத்தியமாகுமா?

இன்று வாழும் மனிதனுக்கு இவ்வாழ்த்து அர்த்தமுள்ளதா? போரும், பூசலும், துன்பமும், துயரமும், பயங்கரமும் நிறைந்து கவலையிலும், பீதியிலும், பசி பட்டினியிலும், வாழ்க்கைப் பிரச்சனைகள் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் மனிதன் எவ்வாறு சமாதானத்துடன் வாழ முடியும்? "சமாதானமாக வாழ்வீராக" என்று வாழ்த்துகிறோம். இவ் வாழ்த்து அர்த்தமுள்ளதா? இவ்வாறு வாழ்வது சாத்தியமாகுமா ... ?

ஆனால் மனிதன் சமாதானத்தை விரும்புகின்றான். சமாதானத்துக்காக பல அமைப்புகள் உலகளாவிய ரீதியில் முயற்சிகளை மேற்கொள்ளுகின்றன. அதேவேளையில் அதற்கு மாறான செயற்பாடுகளும் இடம் பெறாமலில்லை. அணு ஆயுதங்கள், உயிரை அழிக்கும் ஆயுதங்கள், நாடுகளுக்கிடையே போட்டி போட்டியாக குவிக்கப்படுகின்றன. நாட்டுத் தலைவர்கள் தங்கள் படைப் பலத்தைப் பெருக்க விஞ்ஞானிகளை ஊக்குவிக்கின்றனர். அதே வேளையில் ஆயுதக் குறைப்புக்களைப் பற்றியும் பேசிக் கொள்கிறார்கள். சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கோடு செயற்படுபவர்களே அதற்கு மாறான செயற்பாடுகளில் ஈடுபடாமலில்லை. சமாதானம் வேண்டும்! சமாதானம் வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குரல் எங்கும் ஒலிக்கின்றது. இப்படியான மாறுபட்ட நிலையில் சமாதானம் என்றால் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

உலகத்திலே சமாதானம் என்று கருதப்படுவது பிரச்சனைகள் அற்ற நிலையை - போர்கள் நிறுத்தப்படுவதை — குழப்பங்கள் இல்லாதிருப்பதைக் குறிக்கின்றது. இந்தச் சமாதானம் பிரச்சனைகளைத் தவிர்ப்பதிலும், அவற்றிலிருந்து தப்புவதிலும் பெறும் சமாதானம். இதை ஓர் நிரந்தரமான சமாதானம் என்று சொல்லமுடியாது. இது ஒரு தற்காலிக சமாதானமே. இவ்வித சமாதானம் ஏற்படுவதால் பின்னர் பிரச்சனைகள் ஏற்படாது என்று சொல்லமுடியாது. எத்தனையோ குழுக்களிடையே, சமூகங்களிடையே, நாடுகளிடையே இணக்கம் ஏற்பட்டுச் சமாதானம் நிலவியபோதும் மீண்டும் பிணக்குகள் ஏற்பட்டு சமாதானம் சீர்குலைந்த சம்பவங்கள் கொஞ்சமல்ல. மனித வரலாற்றில் இப்படியான சம்பவங்கள் ஏற்பட்டிருப்பதை உலக வரலாறு எடுத்துக் கூறுகிறது.

உலகில் சமாதானம் நிலைத்து நிற்க முடியாமைக்கு காரணம் என்ன? மனிதனிடம் காணப்படும் சுயநலம், குறுகிய மனப்பான்மை— கட்சி மனப்பான்மை போன்றவை காரணமாக இருக்கின்றன. குறிப்பாக கூறுவதானால் ஆவியின் ஏவுதற்படி வாழாமல், ஊனியல்புகளின் படி வாழ்வது. அதாவது பாவத்திற்கு அடிமைப்பட்ட நிலையில் வாழ்வது. இப்படியான நிலையில் நாம் சமாதானத்தை விரும்பினாலும் அதன்படி வாழமுடியாமல் இருக்கின்றது. இத்தகைய போக்கினால் தனிமனிதன் தன்னுள்ளத்தில் சமாதானமற்றவனாக வாழ்கிறான். இதன் காரணமாக குடும்பத்தில் சமாதானமில்லை, குழுக்களிடையே சமாதானமில்லை. சமுதாயத்தில், நாட்டில், உலகில் சமாதானமில்லை. போர்களும், பிளவுகளும், அழிவுகளும் இன்று மனித வாழ்வைச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருப்பதை இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

படைப்பலப்போட்டி அமைதியை நிலையாகக் காக்கும் ஒரு பாதுகாப்பு வழியல்ல என்றும், இத்தகைய படைக்குவிப்பால் விளையும் சமநிலைமை நிச்சயமான உண்மை அமைதி ஆவதில்லை என்றும் மனிதர் உறுதியாக நம்பவேண்டும்.

( 2-ம் வத். சங்கம் – இன்றைய உலகில் திருச்சபை: எண். 81 )

## இயேசுவில் நம் சமாதானம்

மனிதன் அமைதியை, சமாதானத்தை அடைய வேண்டுமென்று துடியாய் துடிக்கின்றான். எங்கு கிடைக்குமென்று அலைந்து திரிகிறான். மதங்களில் அதைத் தேடுகின்றான். மதங்கள் இச் சமாதானத்தை அவனுக்குக் கொடுக்கவேண்டும். கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்ததன் நோக்கம் உலகிற்கு சமாதானத்தை கொடுப்பதற்காகவே. இயேசுவின் பிறப்பின்போது "உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி ஆகுக" ( லூக். 2 : 14 ) என்ற வானதூதரின் பாடல் இதை வெளிப் படுத்துகிறது. கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோது இச் சமாதானத்தை மக்களுக்கு வழங்கினார். யார் யாரெல்லாம் அவரில் விசுவாசம் கொண்டார்களோ, அவர்கள் சமாதானத்தைப் பெற்றுக் கொண்டார்கள். பாவ வாழ்வில் இன்பத்தைத் தேடிய பாவிப் பெண் அதில் நிறைவு காணாதவளாக மனந்திரும்பி இயேசுவிடம் வந்தாள். இயேசு அவள் பாவத்தை மன்னித்து "உன் விசுவாசம் உன்னை மீட்டது சமாதானமாய்ப் போ" என்று அவளுக்கு சமாதானத்தை வழங்கினார் ( லூக். 7 ; 50 ). பல காலம் நோயினால் வருந்தி வாழ்வில் அமைதியிழந்து வாழ்ந்த பெரும்பாடுள்ள பெண் இயேசுவிடம் வருகின்றாள். இயேசு தன்னைக் குணமாக்குவார் என்ற விசுவாசத்தில் அவருடைய ஆடையைத் தொட்டாள்; குணமடைந்தாள். "மகளே உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று சமாதானமாய்ப் போ" ( லூக். 8 : 48 ) என்று அவளுக்கு சமாதானத்தை அருளினார். எவ்வழியில் என்றாலும் பணத்தை அதிகமாக சேர்த்து உலக சொத்துக்களில் சுகம் காணலாம் என்று வாழ்ந்து வந்தான் சக்கேயு. ஆனால் அவன் சொத்துக்களில் நிறைவைக் காணவில்லை; இயேசுவில் நிறைவைக் கண்டான். தன் வாழ்வை மாற்றிக் கொண்டான். சமாதானத்தைக் கண்டடைந்தான்.

இவ்வாறாக யேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது அவரிடம் பலர் சமாதானத்தைப் பெற்றுக்கொண்டார்கள். "அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து யேசுவுக்குள் உங்கள் உள்ளத்துக்கும் மனத்துக்கும் அரணாயிருக்கும்" ( பிலிப். 4 : 7 ) என்ற வார்த்தைகள் அமைதி, மனிதன் அறிவிலிருந்து கிடைப்பதல்ல எனச் சுட்டிக் காட்டுகின்றன.

உண்மை அமைதி என்பது மனிதன் இறைவனோடும், இயேசுவோடும் கொள்ளும் கூட்டுறவாகும். "இயேசுவே நம் சமாதானம்" ( எபே. 2 : 14 — 17 ).

உலக சமாதானம் போன்றதல்ல, கிறிஸ்துவின் சமாதானம்

சமாதானத்தை உலகிற்கு வழங்க வந்த கிறிஸ்துவின் வாழ்வை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது அவர் வாழ்நாள் முழுவதும் எதிர்ப்பையும், இன்னல்களையும் எதிர்கொள்ள வேண்டியவரானார். இறுதியில் சிலுவை மரணத்திற்குட்பட்டார். அவரது வாழ்வு தோல்வியுற்றதுபோல் தோன்றியது. ஆனால் அவர் மரணத்தை வென்று உயிர்த்தார். அவர் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சனைகளை மேற்கொண்டார். சமாதானத்தின் அரசராக அவர் விளங்குகிறார். அவர்தான் எமது பிரச்சனைகளை நாம் மேற்கொள்ள சக்தி அளிக்க வல்லவர். "என்னில் நீங்கள் சமாதானத்தைக் கண்டடையும்படி இதையெல்லாம் நான் உங்களுக்குச் சொன்னேன். உலகில் உங்களுக்கு வேதனை உண்டு. ஆயினும் தைரியமாயிருங்கள். நான் உலகை வென்றுவிட்டேன்" (அரு 16 : 33) என்றார்.

கிறிஸ்து உலகை வென்று விட்டேன் என்று கூறும்போது எமக்கு வரக்கூடிய எல்லா விதமான தீமைகளையும் வென்றுவிட்டார். பசி பட்டினியோ, துன்பவேதனைகளோ, உள்ளத்தை உறுத்தும் பாவமோ, போர்களோ எதுவாக இருந்தாலும் நாம் அஞ்சவேண்டியதில்லை. ஏனென்றால் இவை எதுவும் நாம் கிறிஸ்துவிடமிருந்து பெற்ற சமாதானத்தை நம்மிடமிருந்து அகற்ற முடியாது. "நான் உங்களுக்கு அளிக்கும் சமாதானமோ உலகம் தரும் சமாதானம் போல் அன்று" (அரு,14:27). உலகம் தரும் சமாதானம் நிலையற்றது. தற்காலிகமானது.

ஆனால் கிறிஸ்து தரும் சமாதானம் நிலையானது. இதை நாம் நன்கு உணர்ந்து கொள்வதில்லை. அதனால்தான் பிரச்சனைகள், தொல்லைகள், பசிபட்டினி, போர்கள், அச்சுறுத்தல்கள் இல்லாது போனால் நான் அமைதியுடன் வாழலாம் என கூறிக் கொள்கின்றோம். இத்தகைய சமாதானமல்ல கிறிஸ்து தரும் சமாதானம். எத்தகைய சூழ்நிலையிலும் நாம் என்றும் அனுபவிக்கக் கூடியதுதான் கிறிஸ்து தரும் சமாதானம்.

சமாதானம் ஒரு கொடை

இந்தச் சமாதானம் இறைவனிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் ஒரு கொடை. எனவேதான் ' நான் உங்களுக்கு அளிக்கும் சமாதானமோ உலகம் தரும் சமாதானம் போல் அன்று'' என்று கூறினார். இந்தச் சமாதானம் என்ற கொடையையே உயிர்த்த கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்கு வழங்கினார். இச்சமாதானம் கிறிஸ்து தன்னிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமே கொண்டிருந்த சமாதானம். "என் சமாதானத்தையே உங்களுக்கு அளிக்கிறேன்" என்றார். இச்சமாதானத்தைக் கொடையாகப் பெற்றுக் கொண்ட சீடர்கள் தம் வாழ்வில் எவ்வித இக்கட்டுகள், இடையூறுகள் ஏற்பட்ட போதும் சமாதானம் உள்ளவர்களாக இருந்தார்கள். அச்சுறுத்தல்கள் உயிர் ஆபத்துகள் மத்தியிலும் தாம் பெற்றுக்கொண்ட சமாதானத்தைப் பிறருக்கும் வழங்க முன்வந்தார்கள். அவர்கள் கொண்டிருந்த சமாதானத்தை யாரும் அகற்றிவிட முடியாது.

எனவே நாமும் எத்தகைய பிரச்சனைகள் மத்தியில் வாழ்ந்தாலும் கிறிஸ்து தரும் சமாதானத்தை அனுபவித்து வாழமுடியும். நம் வாழும் இந்நாட்டினில் ஏற்படும் பிரச்சனைகள், அச்சுறுத்தல்கள், கவலைகள் போர்கள் மத்தியில் உலகம் தரும் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் கிறிஸ்து தரும் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவே நாம் சமாதானத்துடன் வாழலாம்.

சமாதானத்தைப் பிறருக்கும் வழங்குவோம்.

நாம் மட்டும் இச்சமாதானத்தை அனுபவித்தால் போதுமா? பிறருக்கும் இச்சமாதானத்தைக் கொடுக்கவேண்டியது நம் கடமை. "சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்" என்று நற்செய்தி கூறுகின்றது எனவே சமாதானத்தைப் பிறரும் பெற்றுக் கொள்ள நாம் வழி வகுக்க வேண்டும். இன்று நாம் சமுதாயத்தை உற்று நோக்கும் போது அங்கு பலவகையிலும் ஒடுக்கப்பட்ட — உரிமைகள் அற்ற— உடைமைகள் அற்ற மக்களைக் காணக் கூடியதாக உள்ளது. இவர்களுக்கும் நாம் சமாதானத்தைக் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம். பசி பட்டினியோடு வாழ்பவர்க்கு எம்மிடமுள்ளதைப் பகிர்ந்து கொடுப்பதால் — மனித உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள் தங்கள் உரிமைகளை பெறச் செய்வதால் — நீதி நிலவச் செய்வதால் — பெரும்பான்மை சிறுபான்மை பாகுபாடுகள் நீக்கப்படுவதால் -- பிறரும் சமாதானத்தைப் பெற்று வாழ நாம் ஒத்துழைப்புக் கொடுப்பவர்களாக இருக்க முடியும்.

இத்தகைய சமாதானத்துக்காக உழைப்பவர்களுக்கு ஆபத்து இல்லாமல் இல்லை. பல வகையான துன்பங்கள், தொல்லைகளுக்கு உள்ளாக நேரிடும். உயிரைத்தானும் இழக்கநேரிடலாம். "நான் மண்ணுலகிற்கு சமாதானத்தை அளிக்க வந்தேனென்று எண்ணுகிறீர்கள்? இல்லை. பிரிவினை உண்டு பண்ணவே வந்தேன் என உங்களுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிறேன்'' (லூக் 12:51) என்றார் கிறிஸ்து. சமாதானத்திற்காகப் பாடுபடுபவர்கள் பலரின் எதிர்ப்புக்கும் கண்டனங்களுக்கும் உள்ளாக நேரிடும். இருந்தாலும் இவர்கள் சமாதானத்துடனே வாழ்வார்கள். ஏனெனில் உயிர்த்த கிறிஸ்து வழங்கிய கொடையாகிய சமாதானம் அவர்களில் நிலை கொண்டுள்ளது. நாமும் இச்சமாதானம் என்னும் கொடையைப் பெற்று வாழ்வோம்.

'' ஒரு குறிப்பிட்ட நோயைப் போக்குவது அவரது நோக்கமல்ல' மாறாக நோய்களுக்கும், துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணமாக சமுதாயத்தில் வளர்ந்து வரும தீய சக்தியை அழிப்பது தான் மீட்பர் யேசுவின் பணியாகும் ''.

சுபாஸ் பிரபு

'' மண்ணைச் சார்ந்த நமக்கு மகிமையடைந்த கிறிஸ்து தம்மை நிரந்தரமாகக் காட்டமுடியாதாகையால், மகிமையடையாத இவ்வுலகச் சாதனங்கள் வழியாகத்தான் நம்மிடையே தோன்ற முடியும். கட்புலனாகாத அவருடைய விண்ணக வாழ்வை மண்ணகப் பொருட்கள் நமக்குக் காட்ட முடியும். இவை அருட் சாதனங்கள் எனப்படும் ''.

Schillebeeckx

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானாந்த வாழ்வில் உயிர்ப்பின் அனுபவம்

அருள் சகோதரி M. பொனவெஞ்சர், தி. கு.

முன்னுரை

**அ**ன்பை அனுபவித்தவனுக்குத்தான் அது என்ன என்பது புரியும். ஒரு தாயின் அன்பு என்றால் என்ன? அது எப்படியிருக்கும் என்றெல்லாம் தாயன்பை புரிய த ஒரு பிள்ளைக்கு காலமெல்லாம் சொல்லி வந்தாலும் அது புரிந்துவிடாது. ஒரு நிமிடம் அது தன் தாயின் மடியில் தலைவைத்து, அந்த அன்பைச சுவைத்து… ட்டால் நாம் அதுபற்றிக் கூற வேண்டிய அவசியமும் ஏற்பட்டாது. வார்த்தைகள் சொல்லாதவற்றை வாழ்க்கை அனுபவம் சொலலிவிடும். இந்த வகையில், உயிர்பபின் அனுபவம்பற்றி வார்த்தைகளில் வடிக்க முனைந்தால், அது ஒரு நீண்ட முயற்சியாகப் போய்க் கொண்டிருக்குமேயொழிய அனுபவம் கை கூடிவிடாது. இந்த உண்மையை உளமார ஏற்றுக் கொண்டுதான் இதனை எழுதத் துணிந்தேன். அனுபவித்தவனுக்கு வார்த்தைகள் அர்த்தமற்றவை அனுபவிக்க ஆசைபபடுபவனுக்கு வார்த்தைகளும் துணையாகலாம் அல்லவா?

## 1. உயிர்ப்பு இதன் — அர்த்தம்

பாஸ்கு மறைபொருளை சிந்தித்துக் கொண்டிருக்கும் நமக்கு 'உயிர்ப்பு' ஒரு புதிய பதம் அல்ல. இயேசு பிறந்தார், வாழ்ந்தார், மரித்தார், உயிர்த்தார், சாவை வெற்றிகொண்டார். ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்வும் இதுதான். திருமுழுக்கிலிருந்தே இந்த வாழ்வு ஆரம்பித்து விடுகிறது. இறுதிநாளில் உயிர்ப்போம் என்பது நம் கிறிஸ்தவ விசுவாசம். ஆயினும் வாழும்பொழுதே சாவு, சாகும் ஒவ்வொரு கணமும் உயிர்ப்பு! மடிவதில் ஓர் உயிர்ப்பு இருக்க முடியுமா? இதன் பொருள்தான் என்ன?

உயிர்ப்பு ஒன்று இருக்கும் என்றால் சாவு என்பது இருந்துதான் ஆகவேண்டும். சாவு ஒன்று இருக்கும் என்றால் வாழ்வு என்பது இருந்து தான் ஆகவேண்டும். இதுதான் நியதி என்று கூடக் கூறிவிடலாம். ஆயினும் வாழ்ந்து கொண்டே சாவதும், இறந்துகொண்டே உயிர்ப்பதும் இந்த உடல் வாழ்க்கையில் என்றும் நிகழ முடியுமா? எத்தனை முறை நிகழ முடியும் என்றெல்லாம் எண்ணத் தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்புப் பற்றி அறிவியல் ரீதியாகப் பல கோணங்களில் ஆராயலாம். இறுதி நாளில் நடைபெறும் என நாம் நம்பியிருக்கும் உயிர்ப்பைப் பற்றி இங்கு நாம் பேசவில்லை உயிர்ப்பை ஒரு நாளாந்த அனுபவமாகச் சிந்திப்பதுதான் நமது நோக்கம். மண்ணில் விழுந்த மணி நெற்கதிராய் வளர்ந்து பல்மடங்கு பலனளிக்கவேண்டுமா? ... அது மடிய வேண்டும் ( அரு. 12 : 24 ). இதன் மடிவில்தான் உயிர்ப்பும் அடங்கியுள்ளது. நெல்மணிக்குள் சிறைப்பட்டுக் கிடந்த ஓர் உயிருக்கு, அது மண்ணில் விழுந்து மடியும் நேரம் விடுதலையின் நேரம்; முடங்கிக் கிடந்த வாழ்வு விடுவிக்கப்பட்ட விநாடி. உயிர்ப்பைக் கொண்டுவரும் இச்சாவு அவசியமான சாவு, பாக்கியமான இறப்பு. வாழ்வு, மரணம் உயிர்ப்பு — இவை மூன்றும் வெவ்வேறு நிகழ்ச்சிகள் அல்ல. ஒரே நிகழ்ச்சியின் படிமுறைகள்தான். வாழ்வில் நிகழும் தோல்விகளும், ஏமாற்றங்களும், இழப்புக்களும், இறப்புக்களும் வெறும் சோகக் கதைகள் அல்ல. மாறாக உயிர்ப்பு மகிமையின் ஆரம்பப் புள்ளிகள்.

## 2. உயிர்ப்பு ஏன்?

அழகிய வண்ணத்துப் பூச்சி மலர்கள் நடுவே வலம் வந்துகொண்டிருக்கின்றது. இதன் அரம்பநிலை நமக்குத் தெரியும். மயிர் க்காட்டிப் புழுவாக இருந்த நிலையில் தொடர்ந்து இருக்கப்போகிறேன் என்றால் மற்றைய நிலையை அது நினைத்துப் பார்க்கவும் முடியாது. மயிர்க்கொட்டி தன்னை அழிக்கும்பொழுதுதான் மற்றைய உயிர் மலர்கிறது. அழிவதில் தான் அதன் நிறைவும், மகிமையும் துலங்குகின்றன. உண்மையில், அந்த உயிர் அழியவில்லை, தொடர்ந்து வாழ்கிறது.

ஒரு கிறிஸ்தவனின் வாழ்விலும் அவன் வாழ்ந்து பயனளிப்பதற்காக மடியவேண்டும். கிறிஸ்தவ வாழ்வில் நாம் சாகும்பொழுது குறைவதில்லை, வளர்க்கிறோம். நிறைவை நோக்கிச் செல்கிறோம். இறைவனோடு ஐக்கியம் கைகூடுகின்றது. வாழ்வின் அர்த்தத்தைக் கண்டு கொள்கின்றோம். நம்மையே இழந்ததால் வந்த வாழ்வைக்கொண்டு பிறரையும் வாழவைக்கின்றோம். மடிவதில்தான் உயிர்ப்பும், உயிர்த் துடிப்புள்ள வாழ்க்கையும் உண்டு.

## 3. பழைய ஏற்பாட்டில்

பாஸ்கு மறைபொருள் என்றவுடனே, அது நம்மைப் பழைய ஏற்பாடுவரை இட்டுச் சென்று, புதிய ஏற்பாட்டில் உச்சநிலையைக் காண்வைத்து. இன்றைய வாழ்க்கைச் சூழ்நிலையில் நமது இருப்பைநிலை நிறுத்துகிறது. புதிய பாஸ்காவாகிய கிறிஸ்துவை இஸ்ராயேலர் சிந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்து வாழாவிட்டாலும், பழைய ஏற்பாட்டு இறைமக்களின் வாழ்வைக் கூர்ந்து அவதானித்தால் அங்கே இந்த இழப்பும் உயிர்ப்பும் உயிரோட்டமாக இழையோடிக் கொண்டிருந்ததைக் காணலாம். தனி நபர்களாக இருந்தாலும் சரி, குழுக்களாக இருந்தாலும் சரி, இக் கடத்தல் நிகழ்ச்சிக்கூடாகச் சென்றபடியினால்தான். உயிர்ப்பின் அனுபவம் பெற்றார்கள். இறைமக்களின் வாழ்வே உயிர்ப்பின் அனுபவம் தான். இஸ்ராயேல் இனத்தவரை எகிப்திய அடிமைத்தனையிலிருந்து விடுவித்த மோயீசனைப் பார்ப்போம். மாதியான் நாட்டுக்கு ஓடியதுடன், இப்பணியிலிருந்து தப்பிவிட்ட நிம்மதி அவருக்கு; உயிருக்கும் இனி ஆபத்து இல்லை. ஆனால், மோயீசனைக் கொண்டே செய்துமுடிக்க வேண்டிய தனது வேலையை இறைவன் வேறு ஒருவரிடம் கையளிக்க விரும்பவில்லைப் போலும். முட்செடியில் ஆண்டவனின் ஆணை பிறக்கிறது — அவர்தான் இப்பணியைச் செய்யவேண்டும். மோயீசனுக்கோ இது வாழ்க்கைப் போராட்டம். முடிவு நமக்குத் தெரியும். மோயீசன் தனது எண்ணத்திற்கு மடிகின்றார், இங்கு ஒரு சாவு. இறைவனின் வேலையைச் சிரமேற்கொண்டு விரைகின்றார். இங்கு ஓர் உயிர்ப்பு. இறைவனுக்கும், மோயீசனுக்குமிடையே ஒரு நெருக்கம். ஐக்கியம் வளர்கிறது. உயிர்ப்பின் கனி இந்த உறவு. இதன் பயன் ஒரு சமுதாயத்தின் விடுதலை. இதுபோன்று குலமுதுவர், இறைவாக்கினர் ஒவ்வொருவர் வரலாறும் ஒவ்வொரு கதை சொல்ல முடியும்.

## 4. புதிய ஏற்பாட்டில்

சாவை வெற்றிகொண்ட கிறிஸ்து பாஸ்கு மறைபொருளின் நிறைவாகவும், அனைவரினதும் உயிர்ப்பு அனுபவத்தின் பொருளாகவும் அமைந்து விடுகின்றார். அவரது துன்பம், மரணம், உயிர்ப்பிலேதான் நமது துன்பம், மரணம், உயிர்ப்பு என்பன அர்த்தம் பெறுகின்றன. இறுதியில் தந்தைகூட தம்மைக் கைவிட்டார் என்ற உணர்வினுள், தன்னிடம் மீதியாக இருந்த ஆவியை தந்தையிடம் கையளிக்கிறார். தன் வாழ்வின் ஒவ்வொரு விநாடியும் மரித்து, உயிர்த்தார். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றினார். இதனால் வந்தது மீட்பு. இதனை உந்திக்கொண்டிருந்த சக்தி தந்தையோடு அவர் கொண்டிருந்த ஐக்கியம்தான், "என் பொருட்டுத் தன் உயிரை இழப்பவன், அதைக் காத்துக் கொள்வான்" ( லூக். 9 : 24 ). இழப்பதால் வரும் இன்பத்தையும், நிறைவையும் முழுமையாக அனுபவித்தார் கிறிஸ்து. இவ்வழியில் தம்மைப் பின்செல்லவே அனைவரையும் அழைக்கின்றார். திருமுழுக்கில் ஆரம்பிக்கின்ற இந்த இறப்பு – உயிர்ப்புவாழ்வில் தன்னைப் போன்று வாழ வேண்டுமெனக் கேட்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. புனிதர்களின் வாழ்வில்

உயிர்ப்பின் அனுபவம் இன்றி எவரும் புனிதர் ஆனதில்லை. தலைவன் இயேசு நடந்த பாதையில்தான் இவர்களும் நடந்தார்கள். வீர வரலாறு படைத்தார்கள். அமைதியில் அடங்கி ஆழ்ந்த தியானத்தில் வாழ்ந்தவர்களாயினும் சரி, மக்கள் மத்தியில் பணிவிடை புரிந்து வாழ்ந்தவர்களாயினும் சரி, இறப்பும் உயிர்ப்பும் கொண்ட பாதையைத்தான் தேர்ந்து கொண்டார்கள். அவர்களது வீரத்தில், தியாகத்தில், செங்குருதியில்தான் திருச்சபை இன்று மலர்ந்து வளர்கிறது. முனிவர்கள், யோகிகளுடைய வரலாறுகளைப் படிக்கின்றோம். அவர்களது புனிதத்துவத்தின் இரகசியம் இதுதான். இந்த உயிர்ப்பு அனுபவம்தான் அவர்களைப் புனிதர்களாக்கியது.

## 6. இந்திய மறைகளில்

'முக்தி' அல்லது மீட்பு என்பது சாவுக்குப் பின் இறைவனோடு அனுபவிக்கும் ஒரு நிலை எனப் பொதுவாகக் கூறப்படுகின்றது. ஒருவர் இவ்வுலகிலே வாழ்ந்த நல் வாழ்வுக்காக இறைவன் தரும் சம்பாவனையாகவும், இவ்வுலக வாழ்விலேயே, மேலான கதியாகவும், நிறைவான பாக்கியமாகவும் இந்நிலை விளக்கப்படுகின்றது. 'ஜீவன் முக்தி' எனும் போது, இவ்வுலக வாழ்க்கையிலேயே, அதாவது இந்த உடலில் உயிரோடு வாழும் பொழுதே மேற்கூறிய நிறைவான பாக்கியத்தை ஒருவர் அனுபவிக்கும் நிலை என இந்திய மறைகள் பல சாற்றுகின்றன, முக்தி அனுபவத்தை அழிந்துபோகும் இவ்வுலகக் கவலைகள் பாதிக்க முடியாது என்றும் கூறுகின்றன.

'ஜீவன் முக்தர்கள்' ஆவதற்கு இறையனுபவம் கைகூடவேண்டும். ஒருவர் மடிந்து உயிர்க்கும் நிலையிலேதான் இந்த இறையனுபவம் நிறைவாகக் கிடைக்கிறது. நாளாந்த வாழ்க்கை அனுபவமாக இது மாறியிருக்கிறது. பாசக் கட்டுக்களிலிருந்து விடுபட்ட நிலையில் 'ஜீவன் முக்தர்கள்' தம்மையே விடுதலையாக்கிக் கொள்கிறார்கள். இவர்கள் காலத்திற்கோ, இடத்திற்கோ கட்டுப்பட்டவர்கள் அல்லர். உள்ளரங்க சுதந்திரத்தோடு வாழ்பவர்கள்.

உயிர்ப்பு அனுபவம் கைகூடப் பெற்றவர்களும் ஓரளவுக்கு இந்த 'ஜீவன் முத்தர்களைப்' போன்றவர்களே. மீட்பு என்னும் மறுமைப் பாக்கியத்தை நாளாந்த வாழ்வின் நிகழ்வுகளில் — அதாவது தம்மையே அழித்து, உயிர்க்கும் நிகழ்வுகளில் அனுபவிப்பவர்கள். மறுமையை இம்மையிலேயே வாழ்பவர்கள், 'அவர் வாழ்வதற்காக' (அரு 3 : 30) தம்மையே குறைத்துக் கொண்டவர்கள். இறைவனோடு இரண்டறக் கலந்து ஐக்கியமானவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7. துறவிலே உயிர்ப்பு

துறவு அனுபவமும் ஓர் உயிர்ப்பு அனுபவம்தான். கீழ்ப்படிதல் விரத்தத்துவம், ஏழ்மை என்னும் வார்த்தைப்பாடுகளினால் தங்களையே இறைவனுக்கு நைவேத்தியம் செய்து அர்ப்பணிக்கும் துறவிகளுக்கு இது ஒரு பாஸ்கு அனுபவம். ஒவ்வொரு துறவற வார்த்தைப்பாடும் அதன் ஆழத்தில் பலியைக் கேட்டு நிற்கின்றது. பலி, வாழ்வில்தான் உறுதியடைகின்றது. இறையன்புக்காக அனைத்தையும் துறந்துவிடும் துறவி, மற்றவர்களுக்காக தன்னையே அழித்துக் கொடுக்கின்றார். இதில் ஒரு நிறைவு, ஓர் உயிர்ப்பு.

கீழ்ப்படிதல் என்னும் வார்த்தைப்பாட்டினால் ஒருவர் தனது சித்தத்தை இறைவனின் திருவுளத்திற்குப் பணியவைக்கின்றார். தனது புத்தியினால், தெய்வீக ஞானத்தைத் தேடிக் கண்டுணர்ந்து, இறைவன் விரும்புவது என்ன என்பதை உய்த்துணர்ந்து அது தனது இயல்புகளுக்கு மாறானதாக இருப்பினும் அதனைச் செய்ய முன்வருகின்றார். 'ஞான மார்க்கம்' என இந்திய மறைகள் கூறும் மார்க்கத்திற்கு இதனை ஒப்பிடலாம்.

விரதத்துவம் என்னும் வார்த்தைப்பாட்டினால், ஒருவர் தனது மேலான சக்தியாகிய அன்பு செய்யும் ஆற்றல் அத்தனையையும் இறைவனுக்கும், அவர் வழி இறைமக்களுக்கும் தத்தம் செய்கின்றார்; பிளவுபடாத உள்ளத்தோடு, அன்பை அதன் உயர்நிலையாகிய பக்தியாக மாற்றி, அவ்வழி செல்ல தன்னை அர்ப்பணிக்கின்றார். இதனை 'பக்திவழி' அல்லது 'பக்தி மார்க்கம்' எனலாம்.

ஏழ்மை வார்த்தைப்பாட்டினால் ஒரு துறவி கர்மயோகியாக மாறுகின்றார். தனது ஒன்றுமில்லாமையை உணர்வதோடு அனைத்தும் இறைவன்தான் என்ற மனநிலையில் கிறிஸ்துவைப் போன்று ஏழையாக தந்தையில் தங்கி வாழவும், இறைவன் தந்த உலகை விருத்தி செய்து மக்கள் மகிழ்ச்சியாக வாழப் பணியாற்றவுமெனத் தன்னை அர்ப்பணிக்கின்றார். இதனை 'கர்ம மார்க்கத்'துடன் ஒப்பிடலாம்.

இறைவனோடு ஒரு துறவி செய்துகொள்ளும் உடன்படிக்கைதான் இந்த அர்ப்பணம். சுதந்திரமாக அளிக்கப்படும் ஏழ்மை, விரத்தத்துவம், கீழ்ப்படிவு ஆகிய இம் மூன்று வார்த்தைப்பாடுகளிலும் பலியாகும் தன்மை சுவறியிருப்பதை நாம் காணலாம். இவைகளை வாழும் பொழுது இறப்பும், உயிர்ப்பும் தினமும் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. இன்றைய உலகில்

பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல், சமய அடிமைத் தனங்களிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்னும் உணர்வு இன்றைய மனிதரிடையே நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகிறது. வளரத் தொடங்கியுள்ள நாடுகளில் விடுதலை இறையியல்கள் உருவாகி வளர்கின்றன. அத்துடன் அசுர வேகத்தில் வளர்ந்து வரும் விஞ்ஞான, தொழில்நுட்பத்துறை முன்னேற்றங்களினால் மனிதனின் 'ஆன்மீகம்' பாதிக்கப்படக்கூடிய ஆபத்தும் இருக்கின்றது. மனிதன் தமக்குள்ளேயே பிளவுபட்டுக் காணப்படுகிறான். இச்சூழ்நிலையில் உயிர்ப்பின் அனுபவம் அவசியம் தேவை. உயிர்ப்பின் அனுபவம் கைகூடப் பெற்றவர்கள் தேவை. இறைவனுக்காக, இறைவன் தந்த உலகிற்காக, தம்மையே அர்ப்பணித்து மடிந்து உயிர்க்கும் உறுதிபெற்ற உள்ளங்கள் இன்று தேவை. 'ஜீவன் முக்தர்கள்' போன்ற விடுதலையடைந்தவர்கள் இச் சமுதாயத்தையே முழுமையாக மாற்றியமைக்கும் சக்திபெற்றவர்கள். உலக மதிப்பீட்டின்படி வாழும் இன்றைய மனிதனுக்கு இவர்கள் பெரும் சவாலாக அமைகின்றனர். கண்களால் காணப்படும் உலகிற்குப் பின்னாலிருக்கும் மெய்மைக்குப் இவர்கள் சான்று பகர்கின்றனர்.

### முடிவுரை

கிறிஸ்தவர்களாகிய நமக்கு நற்கருணைப் பிரசன்னம் கிறிஸ்துவின் பலிவாழ்வை, உயிர் வாழ்வை நாள்தோறும் கூறிக்கொண்டிருக்கிறது. அத்துடன் நமது பலிவாழ்வையும், உயிர்ப்பையும் நினைவுபடுத்துகின்றன. ஆயினும் நாளாந்த வாழ்வில் நம்மை அர்ப்பணிக்கும் சந்தர்ப்பங்கள் வரும்போது பல தடவைகள் பின்வாங்கிவிடுகின்றோம். பிற மறையினருக்கு நமது உயிர்ப்பு வாழ்வு தெளிவாகத் தெரிவதில்லை. நமக்குள் நாமே எடுத்துக்காட்டாக வாழ்வதில்லை. பொது நிலையினராயினும் சரி, பகிரங்கமாக இறை பணிக்கென தம்மை அர்ப்பணித்த குருக்கள், துறவிகளாயினும் சரி இந்த இறப்பு — உயிர்ப்பு அனுவத்தைப் புறப்பே வைத்துவிட்டு கிறீஸ்துவை முழுமையாகப் பின் செல்லமுடியாது. இப் பாதையைவிட்டு விலகினால் அது போலி வாழ்வாகிவிடுகிறது. தனக்கும் அனைவருக்கும் அழிவைக் கொண்டு வரும் ஆபத்தான நிலை இது. இதை உணர்ந்தும் நாம் ஏன் மடிவதில்லை? உயிர்ப்பதில்லை? இச் சிந்தனையோடு செயல்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*SYNOPSIS*

## THE MEANING OF SUFFERING ACCORDING TO CHRISTIANITY

*FR. M. RUBAN*

The meaning of suffering is a perennial question. Why should there be suffering in this world? Why does God punish the innocent? Is there any value for the human suffering?

A man without faith can never find an answer to the question of suffering. Sufferings can be grouped into three: 1. Suffering caused by nature. 2. Suffering inflicted against our nature. 3. Sufferings accepted for the sake of God.

In the Old Testament we find that JOB being a just man was put to test by God. But he kept his faith until the end. In the New Testament, we have the example of Paul who underwent untold sufferings for the sake of Christ (Col. 1:24). The sufferings could never separate him from the love of Christ (Rom. 2:35). Suffering is a continuous struggle in the life of man. The meaning of suffering can be understood only through the paschal mystery of Jesus Christ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LIBERATION FROM SLAVERY

*BRO. B. F. DESMOND KULAS*
(4th year of theology)

Freedom is a thirst found deep down in every man. Freedom or liberation must be taken in its wholistic view. It must penetrate all aspects of human life. The life and mission of Jesus Christ was oriented towards the total liberation of the whole man. The kingdom which Jesus announced consisted of peace, justice and love. Therefore Jesus condemned violence, injustice and slavery.

The church is entrusted with the same mission of Jesus Christ. It is very clear that from the very beginning the church has been working hard to uplift the poor and to set free the slaves. The church has been condemning injustice, violence and all forms of slavery.

It is the paschal mystery of Jesus Christ which brought us redemption from sin. Our whole life on this earth is a journey towards total liberation. We all should strife to re-create the whole world into a family of justice and love.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THE JOURNEY OF THE PASSOVER

*FR. A. PHILIP*

Jahweh heard the cry of the chosen people during their slavery in the land of Egypt. Moses was entrusted with the leadership to set free Israel from Egypt. Before they left Egypt they ate the paschal meal in preparation for their journey. The Red Sea was on their way and God made it easy for them to cross it over under the leadership of Moses. They underwent many hardships during their long journey for forty years towards the promissed land. But the mighty hands of God were with them and He helped them in their needs.

In the New Testament Jesus became the paschal lamp, offering himself for the redemption of mankind. It was hard for the Pharisees as well as for many of his followers to believe that Jesus could ever give his body and blood as food for the people.

The forty days of Lent remind us of the forty years of journey spent by the people of Israel to reach the promised land. The feast of Easter is a passover. Lent is a time given to us to prepare ourselves to celebrate the feast of passover more meaningfully.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THE RESURRECTION AND CHRISTIAN WITNESS

*BRO. T. A. THAVARAJASINGAM*
(4th year of theology)

How can we explain the fact that even after 2000 years of Christ's death there are millions of followers who are ready to commit themselves for his sake? It is because of his resurrection. However we find that there are many even today like the Pharisees who do not believe in the resurrection of Jesus Christ. The chief priests and the Phariseos were trying to hide the truth of Jesus' resurrection. But they failed in their attempt. The resurrection of Jesus is a matter of faith which was confirmed by the apparitions of Jesus to several persons. The early christian community together with the apostles became witness to the resurrection of Jesus Christ. Saul became Paul because of the apparition of Jesus Christ. Saul, who tortured the christians, was not only converted to faith in Jesus Christ but also he became a great apostle in building up the christian communities in several places. The resurrection of Jesus Chrst is the centre of our faith: "If Christ has not been raised, then our preaching is in vain" (1 Cor. 14:44).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PEACE: THE GIFT OF THE RISEN LORD

*MR. C. PANCRAS* (Catechist)

The disciples who followed Jesus Christ with great enthusiasm became highly disappointed after his death on the cross. Not only were their hopes shattered, but also they locked themselves inside the room fearing that they might face the same fate of Jesus Christ. At the moment of their distrust and fear Jesus appeared to them with the greeting of peace. The 'Shalom' of Jesus gave them life and courage.

The increase of the sophisticated weapons and continued war in this modern world is causing a great threat for peace. At the same time the absence of war or disturbances cannot be mere signs of true and lasting peace. The root causes of division, selfishness and slavery must be eradicated. All men should desire and seek peace from the very depth of their hearts. Many are deceived because they do not know the true way to attain peace.

The peace which Jesus Christ brought to this world is true and lasting (Jn. 14:27). The Christians are called to be instruments of peace in this world. The peace of Christ can never be destroyed by war or distrubances. It is the gift of the Risen Lord which can be preserved and experienced by all those who believe in him.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THE EXPERIENCE OF RESURRECTION IN DAILY LIFE

*SR. M. BONAVENTURE H. F.*

If there is to be a resurrection, there has to be a death: cf. Jn 12.24. The moment of 'death' is a moment of liberation. The failures, losses and deaths of daily life are not tragedies, but launching-points for the glory of resurrection.

In the lives of Moses (OT), of Christ himself (NT) and of the saints, we see them passing through the death-and-resurrection experience, thereby attaining union with the Father and committing themselves to their brethren.

In Indian religious, '*mukti*' is a reward of bliss after a life well lived, but '*jivan mukti*' is an enjoyment of such bliss in this life itsef. We could say that *jivan mukti*' is attained by experiencing God through the death-resurrection event in daily life -- by freeing oneself from all bondages, "that he may increase" (Jn 3.30).

The experience of a religious (i. e., renunciation) is also a resurrection experience. Every vow of a religious demands a sacrifice. By obedience, a religious submits his/her will to God's will. searches for divine wisdom, and comes forward to do God's will. This could be compared to *jnana marga*. By celibacy, one devotes one's power of loving to God, and through Him, to His people, thus sublimating one's love to its highest form, *bhakti*: cf. *bhakti marga*. By poverty, a religious realizes his/her own nothingness, learns to rely on God alone, and dedicates himself/herself to developing this world in order that all may live happily: cf. *karma marga*. Thus, death and resurrection happen daily in the sacrifical living of poverty, celibacy and obedience.

If humanity is to avoid disintegration of life, people are needed who are determined to consecrate themselves to die for, and be risen for, God and His world. Persons who are '*jivan muktas*' will have the power to transform society, and to witness to the reality that lies behind the visible world.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் ஆக்கங்கள் . . .

கீழ்க்காணும் மையப் பொருள்கள் அடங்கிய தலைப்புக்களில் அல்லது வேறு பொருத்தமான தலைப்புக்களில் உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

## ஜூன் 1989: திருவழிபாடும் மறுமலர்ச்சியும்

வடிவம் 5 | வண்ணம் 4

1. வாழ்வுக்கும் வழிபாட்டிற்கும் உள்ள தொடர்பு
2. 2ம் வத்திக்கான் சங்கமும் திருவழிபாட்டு மறுமலர்ச்சியும்
3. திருவழிபாட்டு ஆண்டும் விளக்கமும்
4. திருவழிபாட்டில் இறைவார்த்தை
5. பக்தி முயற்சிகளும் திருவழிபாடும்
6. திருவழிபாட்டில் இசையும் கலையும்
7. திருவழிபாடும் சமூகத்தன்மையும்
8. வழிபாட்டு இல்லங்களும் பண்பாட்டுச் சின்னங்களும்
9. பண்பாட்டில் திருவழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்டம்பர் 1989: பண்பாட்டு மயமாக்கல்

**வடிவம் 5** **வண்ணம் 5**

1. பண்பாட்டின் அவசியம்
2. நற்செய்தியும் பண்பாடும்
3. பண்பாட்டின் அடிப்படை: கிறிஸ்து மனுவுடல் எடுத்தல்
4. பண்பாடும் 2ம் வத்திக்கான் சங்கமும்
5. மக்களின் வறுமையும் பண்பாடும்
6. விசுவாச வளர்ச்சியும் பண்பாடும்
7. தமிழ்ப்பண்பாடும் கிறிஸ்தவமும்
8. பண்பாடும் இன்றைய இறையிலாளர்களும்
9. பண்பாடும் விடுதலையும்

## டிசம்பர் 1989: கிறிஸ்தவ ஒன்றிப்பும் உரையாடலும்

**வடிவம் 5** **வண்ணம் 6**

1. வரலாற்றில் கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகள்
2. 2ம் வத்திக்கான் சங்கமும் கிறிஸ்தவ ஒன்றிப்பும்
3. உலக திருச்சபைகள் சம்மேளனமும் (WCC) அதன் வளர்ச்சியும்
4. கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு எதிரான தடைகளும், பிரச்சினைகளும்
5. உரையாடல் ஏன் அவசியம்
6. 2ம் வத்திக்கான் சங்கமும் உரையாடலும்
7. திருச்சபையும் பிறமறைகளும்
8. தமிழ்த்திருச்சபையும் உரையாடலும்
9. உரையாடலும் இன்றைய இறையிலாளர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org